بسم الله الرحمن الرحيم نحمده ونصلي على رسوله الكريم وعلى عبده المسيح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّاَنْتُمْ اَذِلَّةٌ

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian TAMIL

தொகுதி 4

வருடாந்திர சந்தா ரூபாய் 500/-

இதழ் 33-34

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அ.கலீல் அஹ்மது

13-20 துல்ஹஜ் 1440 ஹிஜ்ரி கமரி 15-22 ஸஹூர் 1398 தப்லீக் ஹிஜ்ரி ஷம்ஸி

15-22 ஆகஸ்ட் 2019


**அல்லாஹ்வின் கட்டளை**

وَلِلّٰهِ مَا فِي السَّمٰوٰتِ وَمَا فِي الْاَرْضِ ؕ يَغْفِرُ لِمَنْ يَّشَآءُ وَيُعَذِّبُ مَنْ يَّشَآءُ ؕ وَاللّٰهُ غَفُوْرٌ رَّحِيْمٌ ○

வானங்களிலும், பூமியிலும் உள்ளவை (எல்லாம்) அல்லாஹ்விற்கே உரியன. அவன் விரும்புபவனை மன்னித்து விடுகின்றான்; அவன் விரும்புபவனுக்குத் தண்டனை வழங்குகின்றான். அல்லாஹ் மன்னிப்பவனும், மேன்மேலும் கருணை காட்டுபவனுமாவான். (3:130)

**அஹ்மதிய்யா செய்திகள்**

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய–தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி–யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

**அல்லாஹ்வின் அருள் எப்போதும் இறையச்சமுடையவர்களுடனும், நல்லவர்களுடன் இருக்கின்றது... உங்களது செயல்களை எத்தகையதாக ஆக்கிக் கொள்ள வேண்டும் என்றால் நிராகரிப்பாளர்கள் உங்கள் மீது குற்றம் சுமத்தக்கூடிய எந்த சந்தர்ப்பத்தையும் வழங்காதீர்கள்**

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

**உண்மையான முஸ்லிம் யார்?**

நான் வெளிப்படையாகக் கூறுகின்றேன். அதாவது எப்போது வரை ஒவ்வொரு விஷயத்திலும் அல்லாஹ் முன்னுரிமை வழங்கப்படமாட்டானோ அப்போது வரை எவராலும் உண்மையான முஸ்லிம் என்று அழைக்கப்பட மாட்டார்.

எவர் اَسْلَمَ وَجْهَهٗ لِلّٰهِ ஏற்ப இருப்பாரோ அவரே முஸ்லிம் யார் ஆவார். எவர் தமது முழு ஆற்றலையும் அல்லாஹ்வின் முன்னிலையில் வைத்து விட்டாரோ அவரே உண்மையான முஸ்லிம் என்று அழைக்கப்படுவதற்கு தகுதியானவர் ஆவார்.

எனக்கு நினைவில் இருக்கிறது. அதாவது ஒரு முஸ்லிம் ஏதோவொரு யூதரிடம், நீ முஸ்லிமாகி விடு என்று இஸ்லாத்தின் பால் அழைத்தார். அந்த முஸ்லிம் சுயமே குழப்பத்திலும், தீமையிலும் மூழ்கியிருந்தார். அந்த யூதன், அந்த ஃபாஸிகான முஸ்லிமிடம், முதலில் உங்களை நீங்களே பாருங்கள். நீ முஸ்லிம் என்று அழைக்கப்படுவதனால் மட்டும் கர்வம் கொள்ளாதே என்று கூறினார்.

ஆக பெயர் அல்லது சொல்லால் மட்டும் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று அல்லாஹ் விரும்பவில்லை. அந்த யூதர் தனது கதையைக் கூறுகின்றார். அதாவது நான் எனது மகனுக்கு காலித் என்று பெயர் வைத்தேன். ஆனால் அடுத்த நாளே நான் அவனை கபரில் அடக்கம் செய்ய நேரிட்டது. பெயர் வைத்தால் அதில் பரக்கத் இருக்கின்றது என்றால் பிறகு ஏன் அவன் மரணித்தான்?

ஒருவர் ஏதாவதொரு முஸ்லிமிடம் நீர் முஸ்லிமா? என்று கேட்டால் அதற்கு அவர் அல்ஹம்துலில்லாஹ் என்று பதில் அளிக்கின்றார். ஆக நினைவில் கொள்ளுங்கள். செயல் இல்லாமல் வெறும் சொற்களில் அல்லது நாவால் கூறுவதால் மட்டும் எவ்வித பயனும் ஏற்படப் போவதில்லை. இத்தகைய விஷயங்கள் எவ்வித தகுதியையும் பெற்றிருப்பதில்லை.

அல்லாஹ் கூறுகின்றான்: كَبُرَ مَقْتًا عِنْدَ اللّٰهِ اَنْ تَقُوْلُوْا مَا لَا تَفْعَلُوْنَ

**இஸ்லாத்திற்குத் தொண்டு செய்வதற்கான நற்பாக்கியத்தைப் பெறும் வழி**

இப்போது நான் மீண்டும் எனது முதல் நோக்கத்தின் பக்கமே குனிகின்றேன். அதாவது صَابِرُوْا وَرَابِطُوْا (3:201)

எவ்வாறு எதிரிகளிடம் போரிடுவதற்கு குதிரையின் தேவை இருக்கின்றேதா இஸ்லாத்தின் எதிரி எல்லையைத் தாண்டி இஸ்லாத்திற்கு எவ்வித துன்பத்தையும் ஏற்படுத்திராத வகையில் நீங்களும் ஆயத்தமாக இருங்கள். இதற்கு முன்பும் நான் கூறியுள்ளேன். அதாவது நீங்கள் இறைவனது அடைக்கலத்தில் வருவதற்கும், இந்த தொண்டிற்கான நற்பாக்கியம் கிடைப்பதற்கும் மேலும் இஸ்லாத்திற்காக தொண்டு செய்ய வேண்டும் என்றும் நீங்கள் விரும்பினால் பிறகு முதலில் உங்களிடம் இறையச்சத்தையும், தூய்மையையும் மேற்கொள்ளுங்கள். இஸ்லாத்தின் வெளிப்புற ஆற்றல் எவ்வளவு பலவீனமாகி விட்டது. மார்க்கங்கள் அவர்களை எந்த அளவுக்கு வெறுப்புடனும், ஏளனத்துடன் பார்க்கின்றது என்பதை நீங்கள் பார்க்கின்றீர்கள். உங்களது உட்புற மற்றும் உள்ளத்து ஆற்றலும் பலவீனமாகி விட்டதென்றால் பிறகு முடிவு நல்லதாக இருக்காது என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.

நீங்கள் உங்களது ஆன்மாவைத் தூய்மைப்படுத்துங்கள். மேலும் அது குதிரையைப் போன்று வலுவானதாகவும், பாதுகாப்பாகவும் இருக்க வேண்டும். அல்லாஹ்வின் அருள் எப்போதும் இறையச்சமுடையவர்களுடனும், நல்லவர்களுடன் இருக்கின்றது. உங்களது நல்லொழுக்கங்களையும், செயல்களையும் இஸ்லாத்தின் மீது களங்கம் ஏற்படும் வகையில் அமைத்துக் கொள்ளாதீர்கள். தீயவர்கள் மற்றும் இஸ்லாத்தின் போதனைகளின்படி செயல்படாத முஸ்லிம்களினால் இஸ்லாத்திற்குக் களங்கம் ஏற்படுகின்றது. ஏதாவது முஸ்லிம் மது அருந்துகின்றார். பிறகு ஏதாவதொரு இடத்தில் வாந்தி எடுக்கின்றார். பிறகு போலீஸ் அவரை அடிக்கின்றது. இந்துக்களும், கிறித்தவர்களும் இதன் காரணமாக சிரிக்கின்றனர்.

எனக்கு இத்தகைய செய்தி மற்றும் சிறைச்சாலையின் அறிக்கையைக் கேட்டு மிகவும் துக்கம் ஏற்படுகின்றது... எனவே உங்களது செயல்களை எத்தகையதாக ஆக்கிக் கொள்ள வேண்டும் என்றால் நிராகரிப்பாளர்கள் உங்கள் மீது குற்றம் சுமத்தக்கூடிய எந்த சந்தர்ப்பத்தையும் வழங்காதீர்கள்.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 63–66, 2018 ஆம் ஆண்டு காதியான் பதிப்பு)


பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**இன்ஷா அல்லாஹ் அஹ்மதிய்யத்தின் மூலமாகவே இஸ்லாம் பரவும் என்ற விஷயம் உலகத்திற்குத் தென்படுகிறது**

**நாம் அல்லாஹ்விற்கு நன்றி செலுத்துவதில் முன்னேறியவாறு நமது முயற்சிகளை மேலும் அதிகப்படுத்துவதற்கு முயற்சி செய்ய வேண்டும். இதன் மூலம் அல்லாஹ்வின் இந்த அருள் அதிகரித்துக் கொண்டே இருக்க வேண்டும்**

**நமது ஜல்ஸா நமக்கு தர்பிய்யித்திற்கான வழிவகையாக இருப்பது மட்டுமின்றி தப்லீக்கிற்கும் வழியாக அமைகின்றது**

**இது நமது தற்காலிக சுற்றுச்சூழலாக இருக்கக்கூடாது. மாறாக நமது வாழ்க்கையின் ஒவ்வொரு நொடிப்பொழுதும் இஸ்லாத்தின் அழகிய போதனையை நமது செயல்கள் மூலம் வெளிப்படுத்திக் காட்டக்கூடியதாக இருக்க வேண்டும்**

**ஜெர்மன் ஜமாஅத்தின் கலப்பற்றத்தன்மை மற்றும் நன்றியுணர்வு மற்றும் தியாகத்தின் உணர்வைப் பார்த்து என்னால் இவ்வாறு கூற முடியும். அதாவது இதற்காக (இந்த புதிய இடத்தை வாங்குவதற்காக) பொருள் தியாகம் செய்ய வேண்டியது வந்தாலும் ஜமாஅத் இந்த தியாகத்தைச் செய்யும் இன்ஷா அல்லாஹ். அல்லாஹ் அவர்களுக்கு நற்பாக்கியத்தை அதிகரித்துக் கொண்டே இருப்பானாக**

**ஜெர்மனி ஜல்ஸா ஸாலானா குறித்து முழு உலகத்திலிருந்தும் வந்திருந்த அஹ்மதிகள், அஹ்மதி அல்லாதவர்கள் மற்றும் முஸ்லிம் அல்லாத விருந்தினர்களின் கருத்துக்களை ஹுஸூர் அவர்கள் எடுத்துக் கூறினார்கள்**

செய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 12 ஜுலை 2019** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1398 -ஆம் ஆண்டு **வஃபா** மாதம் **12 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ-

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ-الرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ-اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ-

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ-صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

அல்லாஹ்வின் அருளால் கடந்த நாட்களில் ஜெர்மனி ஆண்டு மாநாடு நிறைவடைந்தது. கடைசி நாளில் நான் கூறியது போன்று அல்லாஹ்வின் அருளால் இந்த ஆண்டு கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கை 40,000 ஐ விட அதிகமாகும். இந்த முன்னேற்றத்தை நாம் ஒவ்வொரு ஆண்டும் பார்க்கின்றோம். இது முழுக்க முழுக்க அல்லாஹ்வின் அருளே ஆகும். நமது பணிகள் மற்றும் நமது முயற்சிகளை விட அதிகமாக நமக்கு வழங்குகின்றான்.

ஆக, நாம் அல்லாஹ்விற்கு நன்றி செலுத்துவதில் முன்னேறியவாறு நமது தரப்பிலிருந்து நமது முயற்சிகளை அதிகப்படுத்துவதற்கு முயற்சி செய்ய வேண்டும். இதன் மூலம் அல்லாஹ்வின் இந்த அருள் அதிகரித்துக் கொண்டே இருக்க வேண்டும். ஜல்ஸாவில் கலந்து கொண்ட ஆயிரக்கணக்கான அஹ்மதியல்லாத மற்றும் முஸ்லிம் அல்லாத விருந்தினர்கள், ஒரு வியக்கத்தக்க சூழலையும், தாக்கத்தையும் பார்க்க முடிந்தது என்று தமது நற்தாக்கத்தை வெளிப்படுத்தியுள்ளனர். எவ்வாறு அனைத்து பணியாளர்களும், குழந்தைகளும் பணி செய்கின்றனர்? எவ்வாறு இந்த பெருந் தொகையைக் கொண்ட மக்கள் எவ்வித கூச்சல் குழப்பமுமின்றி இருக்கின்றனர்? ஆகிய இத்தகைய விஷயங்கள் அந்நியர்கள் மத்தியில் வியக்கத்தக்க விஷயமாகும். இன்னும் சிலரோ, இது அற்புதமாகும் என்று கூறியுள்ளனர்.

ஆக நமது ஜல்ஸா நமக்கு தர்பிய்யத் வழங்குவது மட்டுமின்றி தப்லீக்கிற்கும் மிகப்பெரிய ஒரு வழியாக அமைகின்றது. இந்த விஷயங்கள் நம்மிடம் எதிர்பார்ப்பது என்னவென்றால், நாம் இறைவனுக்கு நன்றி செலுத்துவதில் மேலும் முன்னேறிக் கொண்டே செல்ல வேண்டும். மேலும் இந்த சுற்றுச்சூழல் நமக்கு தற்காலிகமானதாக இருக்கக்கூடாது. மாறாக, நமது ஒவ்வொரு நொடியும் இஸ்லாத்தின் அழகிய போதனையை நமது செயல்கள் மூலமாக வெளிப்படுத்தக் கூடியதாக இருக்க வேண்டும். மேலும் நாம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பைஅத்தில் வந்ததன் உரிமையை எப்போதும் நிறைவேற்றக் கூடியவர்களாக இருக்க வேண்டும்.

பொதுவாக நான் ஜல்ஸாவிற்குப் பிறகு விருந்தினர்களின் தாக்கங்கள் மற்றும் ஆண்டு மாநாட்டைக் குறித்து சில விஷயங்களை எடுத்துக் கூறுவேன். அதனை நான் இப்போது எடுத்துக் கூறுவேன்.

ஆனால் அதற்கு முன்பாக நான் பணியாற்றிய ஆண்களுக்கும், பெண்களுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன். அவர்கள் இரவையும் பகலையும் ஒன்றாக்கி ஜல்ஸாவின் ஏற்பாடுகளைச் சிறந்ததாக ஆக்குவதற்காக முயற்சி செய்தார்கள். அங்கு இப்போது Windup நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இப்போது வரை அவர்கள் பணி செய்து கொண்டிருக்கின்றனர்.

இங்கும், உலகத்திலும் பெரிய ஏற்பாடுகளைக் கொண்ட நாடுகளைப் பார்க்கும் போது தெரிய வருவது என்னவென்றால், பணியாளர்கள் மாநாட்டின் ஏற்பாடுகளுக்காகத் தமது சொந்த நோக்கங்களை பின்னுக்குத் தள்ளி விட்டு தமது ஒவ்வொரு நொடிப்பொழுதையும் ஜல்ஸாவின் ஏற்பாடுகளுக்காகவும், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் விருந்தினர்களுக்காகவும் அர்ப்பணிக்கின்றனர்.

அல்லாஹ்வின் அருளால் ஜெர்மனி ஜமாஅத்தும் கலப்பற்றத் தன்மையிலும், பற்றுணர்விலும் முன்னேறியுள்ள ஜமாஅத்தாகும். இன்னும் சொல்வதென்றால், சில தியாகங்களில் சில பெரிய ஜமாஅத்துகளை விட முன்னேறியுள்ளனர். எங்கேயாவது குறை இருக்குமென்றால் அது பொறுப்பாளர்கள் பணி செய்கின்ற வழிமுறை அல்லது சரியான முறையில் பணியை வாங்காதது அல்லது செய்யாமல் இருப்பதனால் ஏற்பட்டதாகும். ஆனால் ஜமாஅத் உறுப்பினர்கள் அல்லாஹ்வின் அருளால் பெரும் தியாகங்கள் செய்யக் கூடியவர்கள் ஆவர். உயிர், செல்வம், நேரம் ஆகியவற்றை தியாகம் செய்யக் கூடியவர்கள் ஆவர். அல்லாஹ் அவர்களது கலப்பற்றத்தன்மை மற்றும் பற்றுணர்வை அதிகரித்துக் கொண்டே செல்வானாக.

இந்த முறை கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்த பிறகு ஏற்பாட்டாளர்களுக்கும், அமீர் சாஹிப் அவர்களுக்கும் நம்மிடம் நமக்கென்று ஒரு மாநாட்டுத்திடல் இருக்க வேண்டும் என்ற எண்ணம் வந்துள்ளது. இந்த எண்ணம் கடந்த ஆண்டும் வந்திருக்கும். நானும் சில ஆண்டுகளாக அவர்களிடம்

கூறி வருகின்றேன்.

இந்த வருடம் இவர்களுக்கு பார்க்கிங்கிற்கான பிரச்சனையும் இருந்தது. இதனால் டிராஃபிக் பிரச்சனையும் வந்தது. மேலும் ஒரு சந்தர்ப்பத்தில் சிலருக்கு ஜல்ஸா திடலிற்கு வந்து நிகழ்ச்சிகளைப் பார்ப்பதற்கு கஷ்டமும் இருந்தது. இத்தகைய சந்தர்ப்பத்தில் இப்படிப்பட்ட பிரச்சனைகள் எழும் என்பது வெளிப்படையானது தான். எவர்களால் கலந்து கொள்ள முடியவில்லையோ அல்லது தாமதமாக கலந்து கொண்டார்களோ அத்தகைய மக்கள் கோபத்தையும் வெளிப்படுத்தினர்.

பார்க்கிங் மற்றும் டிராஃபிக் பணியில் இருந்த பணியாளர்களும் சிரமத்தில் இருந்தனர். ஆனால் எவ்வாறிருப்பினும் அல்லாஹ்வின் அருளால் மொபைலில் MTA இருந்ததன் காரணமாக மக்கள் நிகழ்ச்சிகளை பார்த்தனர்; கேட்டனர்.

இந்த அனைத்து விஷயங்களும் மிகப்பெரிய ஏற்பாடுகள் இருக்க வேண்டும் என்பதை நமக்குக் கவனமூட்டக் கூடியதாக இருக்கின்றன. மேலும் மாநாட்டின் தேதிகளும் கூட ஏற்பாட்டாளர்களின் அனுமதியுடன் நிர்ணயிக்கப்பட வேண்டியதுள்ளது. சுதந்திரம் இருப்பதில்லை. மேலும் இப்போதும் கூட அவர்கள் மாநாட்டின் திடலை இறுதி நேரத்தில்தான் வழங்கினார்கள்.

இந்த அனைத்து விஷயங்களும், ஜல்ஸாவை நடத்துவதற்கு நமக்கென்று இடம் இருக்க வேண்டும் என்பதை ஏற்பாட்டாளர்களுக்கு கவனமூட்டக் கூடியதாக இருக்கின்றது.

அவர்கள் ஓரிடத்தைப் பார்த்துள்ளாதாகவும், அதை வாங்குவதற்கு அவர்கள் முயற்சி செய்து வருவதாகவும், அது அவர்களுக்குப் பிடித்து விட்டதாகவும் அமீர் சாஹிப் என்னிடம் கூறினார்கள்.

அல்லாஹ்வின் பார்வையில் அந்த இடம் ஜமாஅத்திற்கு சிறந்ததாக இருக்குமென்றால் அதை வாங்குவதற்கான ஏற்பாட்டை அல்லாஹ் செய்வானாக. எளிமையை ஏற்படுத்துவானாக.

மேலும் ஜெர்மனி ஜமாஅத்தின் தியாகம் மற்றும் கலப்பற்றத்தன்மை மற்றும் பற்றுணர்வைப் பார்த்த பிறகு, இந்த இடத்தை வாங்குவதற்கு கொஞ்சம் பொருள் தியாகம் செய்ய வேண்டியது வந்தாலும் ஜமாஅத் மக்கள் இந்த தியாகத்தை செய்வர் என்று என்னால் கூற முடியும். அல்லாஹ் அவர்களது நற்பாக்கியத்தை அதிகரிப்பானாக.

நான் ஜெர்மனி ஜல்ஸாவின் இறுதி நாளிலும் கூறியிருந்தேன். அதாவது தற்போது ஜெர்மனி ஜல்ஸாவும் கூட உலகளாவிய ஜல்ஸாவாக ஆகி விட்டது. மேலும் ஐரோப்பாவைச் சார்ந்தவர்களுக்கு ஜல்ஸாவில் கலந்து கொள்வது முன்பும் எளிதாக இருந்தது. இப்போது வேறு சில நாடுகளான ஆப்பிரிக்க போன்ற நாடுகளுக்கும் எளிதாக ஆகி விட்டது.

பணியாளர்களுக்கு நன்றி தெரிவிப்பது மற்றும் ஜல்ஸாவின் ஏற்பாடுகளைக் குறித்து எடுத்துக் கூறிய பிறகு தற்போது நான் மாநாட்டில் கலந்து கொண்ட சிலரின் கருத்துக்களை எடுத்துக் கூறுவேன். இதிலிருந்து பணியாளர்கள் மட்டுமின்றி மாநாட்டில் கலந்து கொள்கின்ற ஒவ்வொரு அஹ்மதியும் அந்நியர்களுக்கு தமது நல்லொழுக்கங்கள் மற்றும் தமது செயல்களின் காரணமாக அமைதியான முறையில் தப்லீக் செய்வதற்கான வழியாக இருக்கின்றனர் என்பது தெரிய வருகின்றது. ஜல்ஸாவின் நாட்களில் அஹ்மதியல்லாத மற்றும் முஸ்லிம் அல்லாதவர்களுக்கு சனிக்கிழமை மதிய வேளையில் தனியாக ஒரு நிகழ்ச்சியும் நடைபெறுகின்றது. அதில் எனது சொற்பொழிவும் இருக்கும்.

எனவே முதலாவதாக நான் இதில் கலந்து கொண்டவர்களின் கருத்துக்கள் தொடர்பாக எடுத்துக் கூறுகின்றேன். இந்த நிகழ்ச்சியில் எஞ்சியிருக்கின்ற நேரத்தில் அங்குள்ள ஏற்பாட்டாளர்கள் தப்லீக் அமர்விற்கான ஏற்பாட்டைச் செய்கின்றனர். இந்த வருடம் இந்த தப்லீக் அமர்வில் 1179 விருந்தினர்கள் கலந்து கொண்டனர். இதில் 502 விருந்தினர்கள் ஜெர்மனைச் சார்ந்தவர்கள். 341 விருந்தினர்கள் இதர ஐரோப்பிய சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள். இது தவிர 157 விருந்தாளிகள் அரபு சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள். 104 விருந்தாளிகள் ஆசியாவையும், 75 விருந்தாளிகள் ஆப்பிரிக்காவையும் சார்ந்தவர்கள் ஆவர். இவ்வாறு 67 சமூதாயத்தின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இந்த விருந்தாளிகளில் மிஸ்டர் ஹான்ஸ் ஆலிவர் அவர்கள் தப்லீக் அமர்வில் கலந்து கொண்டு, எனது சொற்பொழிவிற்குப் பிறகு தமது கருத்துக்களை தெரிவித்துள்ளார்.

அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாம் அவர்களின் சொற்பொழிவு எனக்கு உணர்வுப் பூர்வமான தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியதாக இருந்தது.

அவர் எழுதுகின்றார்: வெளிப்படையாக அமைதி நிறைந்த மற்றும் அன்றாடப் பணிகளை செய்து கொண்டிருக்கும் இந்த நிலைமையில் வரவிருக்கின்ற அபாயம் மற்றும் போரைப் பற்றி நுகர்ந்து கொள்வது மிக முக்கியமான விஷயமாகும். ஜமாஅத் அஹ்மதிய்யாவின் இமாம் அவர்கள் வரக்கூடிய அபாயத்தை மட்டும் உணரவில்லை. மாறாக, அத்துடன் உலகத்தையும் அவர்கள் எச்சரித்து வருகின்றார்கள். எவ்வாறு அவர்கள் குடியேற்றம் அரசியல் நாகரீகம் மற்றும் பொருளாதாரத்தைப் பற்றி எடுத்துக் கூறினார்களோ அந்த கண்ணோட்டமும் முழுக்க முழுக்க உண்மையே ஆகும்.

மேலும் கூறுகின்றார்: வக்கீல் என்ற அடிப்படையில் இந்த கண்ணோட்டத்தை நான் என்னுடன் இருப்பவர்களுக்கு எடுத்துக் கூற விரும்புவேன். ஏனென்றால் பொதுவாக மக்கள் அடைக்கலம் வழங்கக்கூடியவரின் வருகையைப் பற்றியே மறைமுகமாக எடுத்துக் கூறுகின்றனர். ஆனால் இத்துடன் தொடர்புள்ள நாடுகள் மற்றும் சமுதாயத்தின் சுய லாபத்திற்காக இதனை அவர்கள் கண்டும் காணாமல் விட்டு விடுகின்றனர். ஆனால் இது மிக முக்கிய அம்சமாகும்.

பிறகு ஏர்லைன் IT துறையின் கைதேர்ந்தவரான மேரீனா சாஹிப் கூறுகின்றார்:

நான் சொற்பொழிவைக் கேட்டுக் கொண்டிருக்கும் போது தொடர்ச்சியாக சிந்தித்துக் கொண்டிருந்தேன். அதாவது பல தலைவர்களும் பேசுகின்றனர். மேலும் உலகத்தில் வர இருக்கின்ற அபாயத்தைப் பற்றி எடுத்துக் கூறவும் செய்கின்றனர். உலக அமைதி நிலைபெறுவது தொடர்பாக பேசுவது உலகத் தலைவர்களுக்கு ஒரு சுவாரஷ்யமான ஒன்றாகும். ஆனால் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாமின் சொற்பொழிவில் இருந்த ஆற்றலை நான் வேறு எங்கும் கண்டதில்லை. இன்னொரு விஷயம், இது மிகவும் விரிவாகவும், ஆய்வு செய்து கூறப்பட்டவையாகவும் இருந்தது. இதிலிருந்து அவர்களது வேதனையும் வெளிப்படுகிறது. இந்த வேதனை இருந்திருக்கவில்லை என்றால் பிறகு இத்தகைய கண்ணோட்டத்தை எடுத்துக் கூறியிருக்க முடியாது.

மேலும் கூறுகின்றார்கள்: மார்க்க ரீதியாக மட்டுமல்ல. மாறாக, நாகரீக ரீதியாகவும் உலக அமைதி இறைவனோடு தொடர்பை ஏற்படுத்துவதில் தான் இருக்கிறது என்பதை உலகத் தலைவர்களுக்குத் தெளிவுபடுத்தி விட்டார்கள். சுயநலத்தை விட்டு விட்டு நாம் அடியெடுத்து வைக்கவில்லையென்றால் பிறகு அணுஆயுதப் போரின் அபாயரமான பேரழிவிற்கு நாம்தான் பொறுப்பாளி ஆவோம்.

மேலும் கூறுகின்றார்கள்: எனக்கு எந்த அளவுக்கு விளக்கமாக தூதுச் செய்தி வழங்கப்பட்டு விட்டதென்றால் பகைமை மேலோங்கி

இருக்கவில்லையென்றால் மனிதனின் உடல் சிலிர்த்துப் போவதற்கு இந்த எச்சரிக்கையே போதுமானதாகும். தீர்ப்பு வழங்கக்கூடிய ஒவ்வொரு நபர் வரை இந்த தூதுச் செய்தி சென்றடைய வேண்டும். ஏனென்றால் மனித இனத்தின் மேம்பாட்டிற்காக இது உலக அளவில் சென்றடைவது அவசியமாகும்.

அடுத்து மிஸ்டர் காஸ் மற்றும் ஹைட் அவர்கள் ஜெர்மனி தம்பதியினர் ஆவர். இவர்கள் கூறுகின்றனர்:

நாங்கள் பல வருடங்களாகவே ஜமாஅத்தைப் பற்றி அறிந்தவர்களாக இருந்தும் இங்கு வருவதற்கு முன்பு எங்களது நிலைமை மிகவும் அச்சத்திற்குரியதாக இருந்தது. நாங்கள் இஸ்லாம் தொடர்பாக மீடியாவில் கூறப்படுபவற்றையே உண்மை என நம்பியிருந்தோம். எப்படிப்பட்ட கூட்டமாக இருக்கும் என்று இன்றும் கூட நாங்கள் மிக அதிகமாக நடுங்கிக் கொண்டிருந்தோம். ஆனால் இங்கு வந்த பிறகு எந்த அளவுக்கு Relax ஆகவும், நம்மவர்களைப் போன்ற சூழலும் இருக்கின்றது என்றால் நாங்கள் எங்களது சுற்றுச் சூழலில் சுற்றித் திரிவதைப் போன்றே உணர்கின்றோம்.

எனது சொற்பொழிவிற்குப் பிறகு அவர்களது மனைவி கூறுகின்றார்கள்: நான் இதனைக் கூற விரும்புவேன். அதாவது நான் போரின் அபாயங்களை குறித்து சுயமே கண்டுள்ளேன். (இவர்கள் இரண்டாம் உலகப் போரைப் பற்றி கூறுகின்றார்கள்). அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாம் அவர்கள் எந்த போர் மற்றும் அபாயகரமான அழிவின் காட்சி தொடர்பாக முன்கூட்டியே எடுத்துக் கூறினார்களோ, மேலும் எந்த நல்லெண்ணத்துடன் மனித இனத்திற்கு எச்சரிக்கை செய்து வருகின்றார்களோ அதன் தாக்கம் என்னைப் போன்ற உலகப் போரைக் கண்டவர்களிடம் வேறு விதமாக ஏற்படுகிறது. எனவே நாங்கள் இந்த சொற்பொழிவின் ஒவ்வொரு சொல்லையும் ஏற்றுக் கொள்கின்றோம். மேலும் தற்போதைய சந்ததிகள் இதனைக் குறித்து குறித்த நேரத்தில் விரைவாக உணர்ந்து கொள்ள வேண்டும் என்று விரும்புகின்றோம்.

இந்தப் பெண்மணியின் கணவர் கூறுகின்றார்: அவர்கள் அபாயத்தைக் குறித்து நிச்சயமாக சுட்டிக் காட்டினார்கள். ஆனால் இதனை எடுத்துக் கூறும் போது அவர்கள் யாரைப் பற்றியும் குறிப்பிடவில்லை. மேலும் அறிவுரையானது அச்சமூட்டக் கூடியதாகவும், எச்சரிக்கக் கூடியதாகவும் அமைந்திருந்தது. மேலும் இதுவே மார்க்கத் தலைவர்களின் அந்தஸ்து ஆகும்.

மேலும் அவர் கூறுகின்றார்: இந்த சொற்பொழிவிற்குப் பிறகு அஹ்மதிய்யா ஜமாஅத் உலகத்திற்காக வேதனையை கொண்டுள்ளது என்பதை நான் ஏற்றுக் கொண்டவனாக செல்கின்றேன்.

அடுத்து நாபெர்ட் வாக்னர் என்ற வக்கீல் கூறுகின்றார்: நான் மாநாட்டில் முதல் முறை கலந்து கொள்ளவில்லை என்றாலும், மேலும் அஹ்மதிகளின் வழக்கு தொடர்பாக அதாவது அஸைலம் வழக்கு தொடர்பாக பல விவகாரங்களை நான் பார்த்துள்ளேன். ஆனால் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாம் அவர்களின் சொற்பொழிவு புதிய குறிப்புகளையும், புதிய கண்ணோட்டத்தையும் உள்ளடக்கியதாக இருந்தது. நான் எனது கருத்தை தெரிவிக்கின்றேன் என்றாலும் இது உடனடியான எதிர் நடவடிக்கையே ஆகும்.

இந்த சொற்பொழிவில் அன்றாடம் எனக்கு ஏற்படுகின்ற பல விவகாரங்களுக்கான குறிப்புகள் இருக்கின்றது. இதனை நான் வீட்டிற்குச் சென்று மீண்டும் சிந்தித்துப் பார்ப்பேன். முஹாஜிரீன் மற்றும் உள்ளூர் வாசிகளின் விவகாரம் தொடர்பாக அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாம் அவர்கள் எடுத்துக் கூறியுள்ள கருத்துக்களின் மூலம், அகதிகளுக்கு அடைக்கலம் வழங்குகின்ற நாடுகள் மற்றும் முஹாஜிரீன்கள் ஆகியோருக்கிடைய ஒரு சம நிலை ஏற்படும். மேலும் குறிப்பாக இதன் மூலமாக அடைக்கலம் புகுந்தவர்களுக்கு கண்ணியம் அதிகரிக்கும். மேலும் இந்த கண்ணோட்டமானது எனக்கும், என்னுடன் பணிபுரிகின்றவர்களுக்கும் இதில் பல குறிப்புகள் இருக்கின்றது. அது எங்களுக்கு உதவக் கூடியதாக இருக்கும்.

உலகியல் ரீதியாகவும் உலகவாதிகளுக்கு உதவி செய்யக் கூடியதாக அமைகின்றது.

பிறகு சுவிட்சர்லாந்திலிருந்து ஒரு பெண்மணி லைலா சாஹிபா கூறுகின்றார்: நான் ஓர் அமைப்பிற்காக பணியாற்றுகின்றேன். நாங்கள் அமைதியை பரப்புவதற்காக பணி செய்கின்றோம். இன்று நான் இந்த சொற்பொழிவை கேட்டேன். இதில் ஒவ்வொரு சொல்லும் அமைதியையை வழியுறுத்தக் கூடியதாக இருந்தது. மேலும் ஒவ்வொரு சொல்லிலும் சகிப்புத்தன்மை மற்றும் மனிதத் தன்மையை மேம்படுத்துவது தொடர்பான கருத்தையே நான் கண்டேன். நீங்கள் சகிப்புத்தன்மை மற்றும் ஒற்றுமையை ஏற்படுத்தி விட்டால் பிறகு நீங்கள் ஒரு அழகான சமூகத்தை வடிவமைக்கக் கூடியவராக இருப்பீர்கள்.

அவர் கூறுகின்றார்: நீங்கள் கூறியவை அனைத்தும் தாக்கத்திற்கு ஆளாக்கக்கூடிய கருத்தாகும். நீங்கள் அனைத்து விஷயங்களையும் எடுத்துக் கூறிய பிறகு மார்க்கத்தின் அடிப்படையில் அதற்கான தீர்வையும் வழங்கினீர்கள். மேலும் இந்த அனைத்து பிரச்சனைகளுக்கும் தீர்வு இறைவனை அடையாளங்கண்டு கொள்வதில் தான் இருக்கிறது. மேலும் மார்க்கம் என்பது பிரச்சனைக்குரியதல்ல. மாறாக, பிரச்சனைகளுக்கு தீர்வாக மார்க்கம் இருக்கிறது என்பதை நீங்கள் நிரூபித்துள்ளீர்கள்.

ஒரு ஜெர்மனி பெண்மணி கூறுகின்றார்: இந்த சொற்பொழிவில் தற்போதுள்ள பிரச்சனைகளைப் பற்றி பேசப்பட்டது எனக்கு மிகவும் பிடித்திருந்தது. இதற்கு முன்பும் சில அரசியல்வாதிகள் பேசினர். ஆனால் அவர்களது பேச்சில் எவ்வித தாக்கமும் இல்லை. அந்த விஷயங்களை எவராலும் கூற முடியும். ஆனால் இந்த சொற்பொழிவு முற்றிலும் மாறுபட்டதாகும். நீங்கள் உண்மையான பிரச்சனை குறித்து பேசினீர்கள். அணு ஆயுதப் போர் தொடர்பாக பேசினீர்கள். பருவ மாற்றம் குறித்து பேசினீர்கள். இமிகிரேஷன் பற்றி பேசினீர்கள். மேலும் இதற்கான தீர்வையும் நீங்கள் எடுத்துக் கூறினீர்கள். மார்க்கத்தின் மீது தடையை ஏற்படுத்துவற்குப் பகரமாக மார்க்கத்தை மேம்படச் செய்ய வேண்டும். மக்கள் இறைவன் பக்கம் வர வேண்டும் என்று கவனமூட்டினீர்கள்.

மேலும் இன்று நடக்கின்ற போருக்கு மார்க்கத்துடன் எவ்வித தொடர்பும் கிடையாது என்பதை தெளிவாக எடுத்துக் கூறி விட்டீர்கள். அரசியல் குறித்தும் கருத்தை தெரிவித்தீர்கள். மேலும் சில நேரங்களில் வெளிப்படையாகவும், சில நேரங்களில் மறைவாகவும் ஆற்றல்மிக்க நாடுகள் பலவீனமான நாடுகளிடமிருந்து பயன் பெறுகின்றனர் என்றும் கூறினீர்கள்.

இவர் மாணவர் ஆவார். நல்ல கண்ணோட்டத்தை இவர் வெளிப்படுத்தியுள்ளார். இதன் பொருள் என்னவென்றால், மக்கள் கவனமாக கேட்கின்றனர். அதனைப் பற்றிச் சிந்திக்கின்றனர்.

பிறகு ஜெர்மனியைச் சேர்ந்த ஒரு கிறித்தவ பாதிரி Andreas Weisbrot கூறுகின்றார்: நான் ஜல்ஸா ஸாலானாவிலிருந்து மிகுந்த தாக்கத்திற்கு ஆளாகியுள்ளேன். எனது சொற்பொழிவு தொடர்பாக கூறுகின்றார்: இந்த சொற்பொழிவு என்னை மிகவும் வியப்பிற்குள்ளாக்கி விட்டது. அணுஆயுதப் போர் தொடர்பாக எனக்கு இந்த அளவுக்கு உணர்வு இருக்கவில்லை. எனது எண்ணமும் இதுவே ஆகும். அதாவது நாம் அமைதியின் பக்கம் கவனம் செலுத்தும் போதும், இணைந்து அமைதியை தேடும்போதுதான் முன்னேற்றமடைய முடியும். இந்த நோக்கத்திற்காக ஒரு வலுவான சமூகம் அவசியமாகும். அதில் நாம்

சகோதரத்துவத்தை நிலைநாட்ட வேண்டும்.

பிறகு ஜல்ஸாவின் பொதுவான பல கருத்துக்களிலிருந்து சில கருத்துக்களை மட்டும் நான் எடுத்துள்ளேன். பொதுவான கருத்து தொடர்பாக சிலவற்றை நான் எடுத்துக் கூறி விடுகின்றேன்.

70 நபர்களைக் கொண்ட ஒரு குழு மெஸிடோனியாவிலிருந்து வந்திருந்தது. அதில் 8 பத்திரிகை நிருபர்கள் அடங்குவர். இரண்டு உள்ளூர் டிவி சேனமுல், ஆறு தேசிய டிவி சேனலும் அதில் அடங்கும். அவர்கள் என்னிடமும் நேர்காணல் எடுத்தனர். இவர்கள் மட்டுமின்றி குழுவில் 15 கிருத்தவ நண்பர்களும், 23 அஹ்மதியல்லாத நண்பர்களும், 24 அஹ்மதிகளும் இருந்தனர். இதில் ஏற்கெனவே தப்லீக்கின் கீழ் இருந்த 5 அஹ்மதிய்யல்லாத நண்பர்கள் மாநாட்டின் ஏற்பாடுகள் மற்றும் நிகழ்ச்சிகளைப் பார்த்து பைஅத்தும் செய்து விட்டனர்.

மெஸிடோனியாவிலுள்ள குழுவின் ஒரு பெண்மணி Aleksandra Doneva கலந்து கெண்டார்கள். கவிதை மற்றும் தத்துவ வடிவில் அவர் கூறுகின்றார்: குடும்பம் இல்லாமல் வீட்டைப் பற்றி நாம் என்ன கற்பனை செய்வது? நல்லொழுக்கம் இல்லாமல் மனிதத்துவத்தை நாம் சிந்தித்துப் பார்க்க முடியுமா? மனிதத்துவத்தின் உண்மைத்துவம் மார்க்கம் மற்றும் கொள்கையின்றி ஒன்றுமில்லை. நேசம் இன்றி மனிதத்துவத்தைப் பற்றி நாம் என்ன எண்ணுவது? மனிதனின் ஆன்மா நிம்மதியடைவது தூய்மையடைவதிலும், அமைதியை பரப்புவதிலும்தான் உள்ளது. இறைவன் மீது நம்பிக்கை கொள்வது மனிதன் மீது மிக அவசியமாகும். பூமியில் எதிர்காலத்தை சிறந்ததாக ஆக்க வேண்டும்.

இது எப்படிப்பட்ட ஒன்று என்றால் இதன் மூலம் நாம் மனிதத்துவத்தை சிறந்ததாக ஆக்க முடியும். மேலும் அஹ்மதிய்யா ஜமாஅத் இவை அனைத்தையும் பேணி நடக்கின்றது. அஹ்மதிகள் அமைதியைப் பரப்புகின்றனர். அமைதியைப் பற்றிய போதனையை வழுங்குகின்றனர். நல்லொழுக்கத்தை நிலைநாட்டுகின்றனர். மேலும் மனித இனம் இவை அனைத்தையும் பேணி நடப்பதற்கு அவர்கள் முயற்சி செய்கின்றனர்.

அஹ்மதிய்யத் மக்களை ஓரிடத்தில் ஒன்று சேர்க்கின்றது. மக்கள் ஆன்மீகத்தில் முன்னேற வேண்டும்; அவர்களிடத்தில் ஒற்றுமை ஏற்பட வேண்டும்; மேலும் இறைவனுக்கு அருகில் வர வேண்டும் என அஹ்மதிய்யத் விரும்புகிறது. இந்த வருடம் ஜல்ஸாவில் நான் மிக நல்ல மக்களைப் பார்த்தேன். சிரித்த முகத்துடன் அவர்கள் எங்களுக்கு மிகுந்த கண்ணியம் அளித்தனர். மேலும் அவர்கள் நல்லொழுக்கத்துடன் சிறந்த வாழ்க்கையை வாழ முடியும் என்று அவர்கள் கருதுகின்றனர்.

நான் நன்றி தெரிவிப்பதுடன் இந்த விஷயத்திற்காகவும் சாட்சி பகர்கின்றேன். அதாவது, நான் எத்தகைய மக்களைப் பார்த்தேன் என்றால் அவர்களுக்கு இறைவன் மீது மிக அதிகமான நம்பிக்கை இருக்கிறது மேலும் அது மிக வலுவாக இருக்கின்றது. மேலும் நீங்கள் இந்த நல்ல பணியை தொடரச் செய்வீர்கள்; இதனை ஒரு துடிப்புடன் தொரடச் செய்வீர்கள் என்றும் நான் நம்புகின்றேன். மேலும் ஒரு நேரம் வரும். அப்போது மக்களுக்கு வாழ்க்கையின் உண்மைத்துவம் என்ன? என்பது பற்றிய ஞானம் ஏற்படும்.

இது ஜமாஅத்தைச் சாராத ஒருவரின் கருத்தாகும். இந்த கருத்தானது, நாம் உண்மையிலேயே வாழ்க்கையின் நோக்கத்தை புரிந்து கொள்ளக் கூடியவர்களாக திகழ வேண்டும். மேலும் அதன் நோக்கத்தைப் புரிந்து கொள்ளக் கூடியவர்களாக இருக்க வேண்டும் என்பதன் பக்கம் கொண்டு வரக்கூடியதாக இருக்க வேண்டும்.

Zoranco Zorinski சாஹிப் கூறுகின்றார்: நான் இரண்டாவது முறையாக ஜல்ஸாவில் கலந்து கொண்டுள்ளேன். இது என்னை கண்ணிப்படுத்துகின்ற ஒரு விஷயமாகும். மாநாட்டின் ஏற்பாடுகள் மிக உயர்வானதாக இருந்தது. எனது எண்ணத்தின்படி ஜல்ஸாவின் ஏற்பாடுகள் கடந்த ஆண்டை விட நன்றாக இருந்தது. உங்களது சொற்பொழிவைக் கேட்டு நான் தாக்கத்திற்கு ஆளானேன். ஒவ்வொரு சொல்லும் மனித இனத்திற்கு ஒரு பாடமாகும். எல்லோரிடத்தும் அன்பு; எவரிடத்தும் இல்லை வெறுப்பு என்ற இந்த தூதுச் செய்தி உலகளாவிய தூதுச் செய்தியாகும். இறைவன் மீது நம்பிக்கை கொள்வதும், அனைத்து மனிதர்களிடமும் அன்பு காட்டுவதும் எத்தகைய செயல் என்றால் அது அனைத்து மனிதர்களிடமும் இருக்கின்ற கருத்து வேறுபாடுகளை அகற்றி விடும். அஹ்மதிய்யா ஜமாஅத் சிறந்த (முஸ்பித்) விஷயங்களையே கற்றுக் கொடுக்கின்றது.

மேலும் அவர் எனது பிரஸ் கான்பிரன்ஸ் தொடர்பாக கூறுகின்றார்: நீங்கள் பத்திரிகை நிருபர்களுக்கு அளித்த பதில் மனித இனத்தின் அடிப்படையான உரிமைகளை எடுத்துக் கூறக்கூடியதாக இருந்தது. நானும் உங்களிடம் நேர்காணல் எடுக்க முயற்சி செய்வேன்.

அவர் கூறுகின்றார்: நீங்கள் நல்ல அறிவுரைகளை வழங்குகின்றீர்கள். மேலும் அதிகமான மக்கள் அஹ்மதிய்யத்தை ஒப்புக் கொள்வார்கள் என்றும் அவர்கள் மனித இனத்தின் மேம்பாட்டிற்காக தொண்டாற்றுவார்கள் என்றும் நான் நம்புகின்றேன். (அஹ்மதிய்யத்தின் மூலமாகவே இஸ்லாம் பரவும் என்று உலகத்திற்கு தெரிகின்றது.)

Vojo Manevski சாஹிப் கூறுகின்றார்: நான் மிகவும் ஆழமாகச் சென்று அஹ்மதிய்யத்தின் தூதுச் செய்தியை புரிந்து கொண்டேன். நிருபர் என்ற அடிப்படையில் நான் பல மார்க்கங்களின் ஒன்றுபட்ட போதனைகளை ஆய்வு செய்தேன். மார்க்கத்தின் அடிப்படை அல்லாஹ்வின் மீது அன்பு மற்றும் மனித இனத்துடன் அன்பு காட்டுவதுடன் தொடர்புடையதாகும். இது எத்தகைய போதனை என்றால் இன்றைய காலத்தில் இது மிக முக்கியமான ஒன்றாகும்.

இன்றைய காலத்தில் உலகத்தை மிகவும் துன்பத்திற்கு ஆளாக்கிய விஷயத்திற்கான தீர்வு இந்த அன்பின் தூதுச் செய்தியில் இருக்கின்றது. இன்று ஐரோப்பாவின் மிகப்பெரிய விவகாரம் அரசியல் வாதிகளின் கைப்பிடியில் இருக்கிறது. அதற்கு பேச்சு வார்த்தையின் மூலமாக தீர்வு காணப்படும். நாம் இறைவனை தேடினால் நமக்கிடையில் மிகப்பெரிய வேறுபாடு எதுவும் இல்லை என்பது மிக விரைவாகவே தென்பட்டு விடும்.

மேலும் அவர் கூறுகின்றார்: எந்த அளவுக்கு நாம்


### திருக்குர்ஆனிலிருந்து...

இவர்கள் நம்பிக்கை கொண்டு இறையச்சத்துடன் செயல்பட்டிருந்தால் அல்லாஹ்விடமிருந்து கிடைக்கும் நற்கூலியே மிகச் சிறந்தது. (இதனை) அவர்கள் அறிந்திருந்தால் (எவ்வளவு நன்றாக இருக்கும்).

(2:104)

A.Nasir Ahmad

அமீர், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத், மேலப்பாளையம்

### திருக்குர்ஆனிலிருந்து...

தொழுகையை நிலைநாட்டுங்கள். ஸக்காத்தைக் கொடுங்கள். நீங்கள் உங்களுக்காக முன்கூட்டியே அனுப்பும் நன்மையையே நீங்கள் அல்லாஹ்விடம் பெற்றுக் கொள்வீர்கள். நிச்சயமாக அல்லாஹ் உங்கள் செயல்களைப் பாப்பவனாவான்.

(2:111)

A.Shamsul Alam

காயித், மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா, மேலப்பாளையம்

இறைவனிடமிருந்து விலகிச் செல்வோமோ அதே அளவிற்கு நாம் மனித இனத்திடமிருந்து விலகிச் செல்வோம். உலக வளர்ச்சியானது ஆன்மீகம் மற்றும் ஒருவர் மற்றவருடனான தொடர்பை முடிவுக்கு கொண்டு வந்து கொண்டிருக்கிறது. எனவே நாம் நமது குடும்பம் மற்றும் நண்பர்களை பாதுகாக்க வேண்டும். மேலும் தொடர்பையும் பாதுகாக்க வேண்டும்.

அடுத்து Jani Redjepov சாஹிப் கூறுகின்றார்: நான் எனது குடும்பத்துடன் ஜல்ஸாவில் கலந்து கொண்டுள்ளேன். ஜல்ஸா நன்றாக இருந்தது. இது எனக்கு மிகப்பெரிய அனுபவத்தை தந்தது. மெஸிடோனியாவில் நான் முதல் முறையாக அஹ்மதிய்யத்தின் தூதுச் செய்தியைக் கேட்ட போது அஹ்மதிய்யத்தின் தூதுச் செய்தி மக்களுக்கு பயன் தரக்கூடிய ஒன்றாகும் என்று எனக்கு தெரிந்து விட்டது. முதலில் எனது குடும்பத்தைச் சார்ந்தவர்கள் இந்த தூதுச் செய்தியை ஏற்றுக் கொண்டனர். பிறகு எனக்கு வழிகாட்டினர். ஜல்ஸாவில் கலந்து கொள்வதற்கான ஏற்பாட்டைச் செய்ததில் நான் உங்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன்.

அடுத்து Tanja சாஹிபா கூறுகின்றார்: நான் முதல் முறையாக ஜல்ஸாவில் கலந்து கொண்டேன். இங்கு எனக்கு அனைத்துமே புதிதுதான். மேலும் நன்றாக இருந்தது. அனைத்து ஏற்பாடுகளும் அனைத்து ரீதியிலும் நன்றாக இருந்தது. குறிப்பாக பணிசெய்யக்கூடிய பணியாளர்களின் நடைமுறை நட்பு ரீதியில் இருந்தது. புன்சிரிப்புடன் நடந்து கொண்டார்கள். நல்லெண்ணத்துடன் பணி செய்து வந்தார்கள்.

பிறகு பல்காரியாவின் ஒரு பல்கலைகழகத்தின் மாணவர் கூறுகின்றார்: மக்கள் பரிவுடன் நடந்து கொண்டனர். இதன் காரணமாகவே நான் இங்குள்ளேன். பைஅத் நிகழ்ச்சிகளை நான் வியக்கத்தக்க ஒன்றைப் போன்று கண்டேன். அதனை எடுத்துக் கூறுவதற்கு என்னிடத்தில் சொற்கள் இல்லை. இத்தனை மக்கள் இங்கு ஒன்று கூடுவது ஒரு சிறப்பான விஷயமாகும்.

பல்காரியாவிலிருந்து 49 நபர்களைக் கொண்ட ஒரு குழு வந்திருந்தது. அதில் 15 அஹ்மதிகளும், 34 அஹ்மதியல்லாதவர்களும், கிருத்தவ நண்பர்களும் இருந்தனர்.

குழுவில் வந்திருந்த ஒரு கிறித்தவ பெண்மணி Yulia சாஹிபா கூறுகின்றார்: நான் இந்த விஷயத்தை சிந்தித்து மிகவும் உணர்ச்சிவசப்படுகின்றேன். அதாவது நானும் அஹ்மதிய்யா ஜமாஅத் ஜல்ஸாவில் ஆயிரக்கணக்கான நபர்களுடன் கலந்து கொண்டுள்ளேன். எவ்வித சந்தேகமுமின்றி நான் கிறித்தவன் ஆவேன். ஆனால் ஹுஸூர் அவர்களது சொற்பொழிவு எனக்கு மிகவும் பிடித்திருந்தது. உங்களது துஆக்கள் உள்ளத்தில் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியதாகும். திருக்குர்ஆன் ஓதுவதும், அதன் மொழியாக்கமும் எனக்கு மிகவும் பிடித்திருந்தது. புகழப்படக்கூடிய விஷயம் என்னவென்றால், நீங்கள் உங்களது கரங்களால் மாணவர்களுக்கு சான்றிதழையும் வழங்கினீர்கள்.

பல்காரியாவின் இன்னொரு பெண்மணி கேஸ்மா Krasrmira கூறுகின்றார்: எனக்கு மூன்றாவது முறையாக ஜெர்மனி ஜல்ஸாவில் கலந்து கொள்ளும் நற்பாக்கியம் கிடைத்துள்ளது. மேலும் ஒவ்வொரு வருடமும் புதிய புதிய விஷங்களைக் கற்பதற்கு எனக்கு வாய்ப்பு கிடைக்கின்றது. நான் சொற்பொழிவுகளை மிக கவனத்துடன் கேட்கின்றேன். ஏனென்றால் நான் பிஸியோதெராபிஸ்ட் மற்றும் ஸைகாலஜிஸ்ட்டும் ஆவேன். இந்த சொற்பொழிவில் கூறப்பட்ட விஷயங்களுக்கேற்ப நான் எனது ஒவ்வொரு நோயாளிக்கும் குணமளிக்க முடியும். மேலும் நான் எனக்காகவும் பயனளிக்கக்கூடிய தகவல்களை ஒன்று சேர்த்து எடுத்துச் செல்கின்றேன்.

பல்காரியாவின் இன்னொரு கிறித்தவ பெண்மணி Ivanka கூறுகின்றார்: எனக்கு முதன் முறையாக ஜெர்மனி ஜல்ஸாவில் கலந்து கொள்வதற்கான சந்தர்ப்பம் கிடைத்தது. நான் அனைத்து விஷயங்களையும் கண்டு உண்மையிலேயே மிகவும் வியப்பிற்குள்ளாகி விட்டேன். குறிப்பாக கிலாஸில் தண்ணீர் கொடுத்த அந்த சிறுமிகளைப் பார்த்து நான் மிகவும் வியப்பிற்குள்ளாகி விட்டேன்.

Galia சாஹிபா என்ற இன்னொரு பெண்மணி கூறுகின்றார்: நான் மூன்று நாட்களும் ஜெர்மனி ஜல்ஸாவில் கலந்து கொண்டேன். நான் ஜல்ஸாவின் விருந்தினர் உபசரிப்பு மற்றும் ஏற்பாடுகளைக் கண்டு மிகவும் தாக்கத்திற்கு ஆளாகினேன். நல்லெண்ணத்தைக் கொண்ட, நல்ல விருப்பங்களைக் கொண்ட அந்த மக்களைக் கண்டு மிகவும் வியப்பிற்குள்ளாகியுள்ளேன்.

ஹங்கரியிலிருந்தும் 8 விருந்தினர்களையும், 11 அஹ்மதிகளையும் கொண்ட ஒரு குழு வந்திருந்தது.

ரோமானிய சமூகத்தைச் சேர்ந்த Szava Vince சாஹிப் கூறுகின்றார்: எங்களது சமுதாயத்தின் முன்னேற்றத்திற்காகவும், அவர்களின் உதவிக்காகவும் நாங்கள் ஓர் அமைப்பை நிறுவியுள்ளோம். இந்த அமைப்பில் 16000 க்கும் அதிகமான உறுப்பினர்கள் இருக்கின்றனர். ஜல்ஸாவில் முதல் முறையாக கலந்து கொண்டுள்ளார்கள். இவருக்கு தமது பணியின் காரணமாக பலரையும் சந்திக்க நேடுகின்றது. இவர் அவர்களது பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு செல்கின்றார். யூதர்கள், முஸ்லிம்கள், கிறித்தவர்கள் ஆகியோரின் நிகழ்ச்சிகளுக்கும் சென்றுள்ளார்.

அவர் கூறுகின்றார்: அன்பு மற்றும் மனித இனத்திற்கான தூதுச் செய்தி, சகோதரத்துவம் ஆகியவற்றை இங்கு வந்துதான் கண்டேன். இதுபோன்று எனது வாழ்நாளில் நான் பார்த்ததே இல்லை. மேலும் வேறு எந்தவொரு நிகழ்ச்சியிலும் நான் கண்டதில்லை. அவர் ஜமாஅத்திற்கு நன்றி தெரிவித்தார். அதாவது நாங்கள் எல்லோரிடத்தும் அன்பு; எவரிடத்தும் இல்லை வெறுப்பு என்று கூறுகின்றோம். அதை செயல் ரீதியாக இங்கே வந்து பார்ப்பதற்கான சந்தர்ப்பத்தை ஜமாஅத் அவர்களுக்கு வழங்கியது. இந்த அனுபவம் எனக்கு வாழ்நாளிற்கான அனுபவமாகும். இதை என்னால் ஒருபோதும் மறக்க முடியாது. மேலும் இந்த ஜல்ஸாவில் கலந்து கொண்டது ஒரு குறிப்பான உணர்வில் இருக்கின்றேன்.

அவர் கூறுகின்றார்: தமது நாட்டில் முஸ்லிம் முஹாஜிரீன்களின் விவகாரத்தில் அவர்கள் மீது குறிப்பான வெறுப்பு இருக்கிறது. நாங்கள் இவர்களுக்காக இதற்கு முன்பும் குரல் கொடுத்து வந்தோம். ஆனால் இப்போது இதை விட அதிகமாக குரல் கொடுப்போம். இவர்கள் தொடர்பாக மீடியா கொடுக்கின்ற தகவல்

## திருக்குர்ஆனிலிருந்து...

எவர் தம்மை அல்லாஹ்விடம் முழுமையாக ஒப்படைத்து நற்செயல் செய்பவராகவும் விளங்குகிறாரோ அவருக்குரிய நற்கூலி அவருடைய இறைவனிடத்தில் உண்டு. அவர்களுக்கு (வருங்காலத்தைப் பற்றிய) எவ்வித அச்சமும் இருக்காது. (இறந்த காலம் பற்றி) அவர்கள் துயரமும் அடைய மாட்டார்கள் (2:113)

M.Sabahul Islam & Mohaideen Ali (Melapalayam)

## திருக்குர்ஆனிலிருந்து...

அல்லாஹ்வின் பள்ளிகளில் அவனுடைய பெயர் கூறப்படுவதைத் தடுத்து, அவற்றைப் பாழாக்க முயல்பவனை விட மிகப்பெரிய அநியாயக்காரன் எவன்? அச்சத்துடனன்றி அவற்றில் அவர்கள் நுழைவது முறையானதன்று. அவர்களுக்கு இவ்வுலகிலும் இழிவு உள்ளது. மறுமையிலம் அவர்களுக்குப் பெருந் தண்டனை உள்ளது. (2:115)

M.Y. Shahul Hameed (Melapalayam)

முற்றிலும் தவறானதாகும்.

தமது தாய் மற்றும் மகனுடன் ஹங்கேரிக்கு ஹிஜ்ரத் செய்து வந்த வஃபா ஹஸன் ஷர்மானி சாஹிபா கூறுகின்றார்: நான் கடந்த ஆண்டும், இந்த ஆண்டும் மாநாட்டில் கலந்து கொண்டேன். கடந்த முறை இவர் பெண்களுக்கான திடலுக்குச் சென்ற போது அங்கு அதிகமான வசதியை உணர்ந்தார்கள். எனவே இவ்வருடமும் அவர்கள் அங்கு சென்றே அனைத்து நிகழ்ச்சிகளையும் கேட்டார்கள்.

இன்னொரு விருந்தாளி Sinan Breshanaj சாஹிப் கடைசி நாளில் பைஅத் செய்து ஜமாஅத்தில் இணைந்தார். அவர் கூறுகின்றார்: இதற்காக நான் அல்லாஹ்விற்கு நன்றி செலுத்துகின்றேன். சில ஆண்டுகளுக்கு முன்பாக என்னை சந்தித்ததும் நான் பைஅத் செய்வதற்கு ஒரு காரணமாகும் என்று கூறுகின்றார்கள். அதன் தாக்கத்தில் அவர்கள் இருந்தார்கள். அதற்குப் பிறகு ஒவ்வொரு வருடமும் ஜெர்மனி ஜல்ஸாவில் கலந்து கொள்ள வருவார்கள்.

இன்னொரு விருந்தாளி Bekim Bici சாஹிப் அவர் கூறுகின்றார்: நான் 2004 ல் பைஅத் செய்தேன். ஜேர்னலிஸத்தில் மிகப்பெரிய வெற்றியைப் பெற்றேன். இதற்காக 2016 ல் நான் மெடலையும் பெற்றேன். பிறகு நான் அல்பானியாவில் பத்திரிகை நிருபராக பணியாற்றினேன். கடந்த ஆண்டு நான் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக விடுப்பிற்கான விண்ணபத்தை வழங்கினேன். ஆனால் அது ஏற்றுக் கொள்ளப்படவில்லை. எனவே நான் பணியை விட்டு விட்டேன். ஏனென்றால் என்னால் இந்த ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்ளாமல் இருக்க முடியாது.

அவர் கூறுகின்றார்: அன்றைய நாளே அல்லாஹ் வேறொரு மீடியாவில் எனக்கு வேலை வாய்ப்பை வழங்கினான். அங்கு நான் ஜெர்மனி ஜல்ஸாவில் கலந்து கொண்டு திரும்பி வந்த பிறகு எனது பணியைத் தொடர்வேன் என்ற எனது நிபந்ததையும் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

அதே போன்று இங்கும் நான்கு மாதத்திற்கு முன்பு ஒரு ஆன்லைன் பத்திரிகையில் பணியாற்றிக் கொண்டிருந்தேன். நிறுவனத்தின் விதிமுறைக்கேற்ப ஆறு மாதத்திற்கு முன்பாக விடுப்பு எடுக்க முடியாது. இருப்பினும் நான் விடுப்பிற்கான விண்ணபத்தைக் கொடுத்தேன். அதுவும் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. எனவே நான் எனது பணியிலிருந்து விலகி விட்டேன். மேலும் அன்றைய நாளே எனக்கு மேலும் மூன்று கம்பெனியிலிருந்து பணிக்கான வேலை வாய்ப்பு வந்தது. எனவே நான் ஒரு கம்பெனியுடன், ஜல்ஸா ஸாலானா ஜெர்மனியில் கலந்து கொண்டு திரும்பி வந்த பிறகு பணியை ஆரம்பம் செய்வேன் என்ற நிபந்தனையின் அடிப்படையில் பணியில் சேர்ந்தேன். எனவே எனது நிபந்தனை ஏற்றுக் கொள்ளப்பட்டது.

எனவே இவர்களது ஈமான் ஆகும். மேலும் இது தான் உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்குவேன் என்ற உடன்படிக்கையை நிறைவேற்றுதலாகும். இதனை இப்போது புதிராக வரக் கூடியவர்கள் வெளிப்படுத்துகின்றனர்.

பிறகு ஓர் அஹ்மதி நண்பர் Gezim Muzhaqi சாஹிபின் தொடர்பு மார்க்கத்தைச் சாராத சமூகத்துடன் இருந்தது. சில ஆண்டுகளுக்கு முன் ஜமாஅத்துடன் தொடர்பு ஏற்பட்டது. மார்க்கம் தொடர்பாக ஜமாஅத் எடுத்து வைத்த ஆதாரங்கள் அவர்களுக்கு பிடித்திருந்தது. இதற்கு முன்பு மவ்லவிமார்களின் கட்டுக் கதைகளினால் அவர்களது உள்ளம் கவனமற்றதாக இருந்தது. எனவே அவர்கள் சில ஆண்டுகளுக்கு முன் பைஅத் செய்தனர். மேலும் மெதுமெதுவாக இஸ்லாமிய போதனைகளைப் பேணுவதற்கு முயற்சி செய்து வருகின்றார்கள்.

அவர் கூறுகின்றார்: ஜல்ஸா ஸாலானா எனக்கு மிகவும் குறிப்பான ஒன்றாக தோன்றியது. ஏற்பாடுகளும், விருந்து உபசரிப்பும் ஒவ்வொரு ஆண்டைப் போன்றும் மிகச் சிறப்பாகவே இருந்தது.

நான் லஜ்னாவில் நிகழ்த்திய உரை மற்றும் நிறைவு அமர்வில் நிகழ்த்திய உரை அவர்களிடம் மிகப்பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. மேலும் இந்த தூதுத் செய்தியை ஆண்களாகிய நாம் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும்.

அடுத்த விருந்தாளி அல்பானியாவைச் சேர்ந்த Ilir Cylandji ஆவார். ஜெர்மனியில் இருக்கின்றார். அவர் கூறுகின்றார்: ஜல்ஸா ஸாலானா ஒவ்வொரு அஹ்மதிக்கும் ஒரு ஆன்மீக இஜ்திமா ஆகும். இதில் அஹ்மதிகள் மட்டுமின்றி மற்ற மார்க்கத்தைச் சேர்ந்த ஒரு பெரும் எண்ணிக்கையில் மக்கள் கலந்து கொள்கின்றனர். ஜல்ஸா ஸாலானாவில் கலந்து கொண்டு இஸ்லாத்தின் அடிப்படையான போதனையைப் பற்றி தெரிந்து கொள்வது மட்டுமல்லாமல் அஹ்மதிய்யா ஜமாஅத் மூலம் நிலைபெற்றுள்ள கிலாஃபத் அமைப்பு மூலம் இந்த அழகிய போதனைகளின் செயல் வடிவத்தையும் அனுபவ ரீதியாக உணர முடிகிறது.

இந்த மூன்று நாட்களில் ஆண்கள், பெண்கள் ஆகியோருக்கான நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. மேலும் தற்போதைய காலத்தின் சவால்களுக்கு இஸ்லாத்தின் அழகிய போதனைகளின் மூலம் அதற்குரிய தீர்வு எடுத்துரைக்கப்படுகிறது. ஓர் அஹ்மதி என்ற அடிப்படையில் நான் முழு வருடமும் இந்த ஜல்ஸாவிற்காக முழு பேணுதலுன் ஆயத்தம் செய்கின்றேன். ஏனென்றால் இங்கு ஒற்றுமையின் உண்மையான ஒரு ஆன்மா தென்படுகிறது. அதை எடுத்துக் கூற முடியாது. மேலும் கலப்பற்ற அன்பு அனைத்து ஜமாஅத் உறுப்பினர்களிடமிருந்தும் வெளிப்படுகிறது. இந்த ஜல்ஸாவில் கலந்து கொண்டு நான் சுவர்க்கத்தில் இருப்பதைப் போன்றும், மேலும் உலகத்திலயே மிகவும் நற்பேறு பெற்றவன் நானே ஆவேன் என்றும் உணர்கிறேன். மேலும் அடுத்த ஆண்டு ஜல்ஸாவிற்கு நான் மிகுந்த எதிர்பார்ப்புடன் காத்துக் கொண்டிருக்கின்றேன்.

பிறகு ஜார்ஜியாவிலிருந்து 85 நபர்களைக் கொண்ட ஒரு குழு வந்திருந்தது. மற்ற நாடுகளிலிருந்து வந்திருந்த குழுவில் இதுவே மிக அதிக எண்ணிக்கையை கொண்ட குழுவாகும்.

Besso சாஹிப் கூறுகின்றார்: பல அஹ்மதிகளிடம் பேசுவதற்கான சந்தர்ப்பம் கிடைத்தது. மேலும் நான் பேசும் போது இந்த ஜமாஅத் எந்த அளவுக்கு மார்க்க சகோதரத்துவத்தை நிலைநாட்டக்கூடியதாக இருக்கின்றது என்பதையும் ஆய்வு செய்ய முற்பட்டேன். இது தொடர்பாக நான் இரண்டு அஹ்மதிகளிடம் பேசினேன். அவ்வாறு பேசும்போது நான் அவர்களிடம் நான் முஸ்லிம்

### திருக்குர்ஆனிலிருந்து...

எவரும் மற்றெவருக்கும் எவ்விதப் பயனும் அளிக்க முடியாத, எவரிடமிருந்தும் எந்த ஈடும் ஏற்றுக் கொள்ளப்படாத, எந்தப் பரிந்துரையும் எவருக்கும் பயனளிக்காத ஒரு நாளுக்கு அஞ்சுங்கள். (அந்நாளில்) அவர்கள் உதவி செய்யப்படவும் மாட்டார்கள். (2:124)

S.S.H.Muhammed Lebbai (Melapalayam)

### திருக்குர்ஆனிலிருந்து...

நாம் (கஅபாவாகிய) அந்த வீட்டை மீண்டும் மீண்டும் ஒன்று கூடம் இடமாகவும், பாதுகாப்பு(க்குரிய இடம்) ஆகவும் ஆக்கிய நேரத்தையும் (நினைத்துப் பாருங்கள்). அடுத்து இப்ராஹீம் நின்ற இடத்தைத் தொழுகைக்குரிய இடமாக ஆக்கிக் கொள்ளுங்கள் (என்றும் கட்டளையிட்டோம்). 2:126

A.Basheer Ahmad (Melapalayam)

கிடையாது. கிருத்தவன் ஆவேன் என்று கூறினேன். இவ்வாறு கூறுவதனால் அவர்களது நடைமுறை முற்றிலும் மாறிவிடும் என்று நான் எண்ணினேன். ஆனால் அஹ்மதிகள் எவ்வாறு முதலில் என்னுடன் நடந்தார்களோ அவ்வாறே இதற்குப் பிறகும் சிறந்த நல்லொழுக்கத்தை வெளிப்படுத்தினார்கள். மேலும் எவ்வித பகைமையையும் அவர்கள் வெளிப்படுத்தவில்லை. (இவ்வாறும் ஜமாஅத்தைச் சாராதவர்கள் நம்மை பரிசோதித்துப் பார்க்கின்றனர்.)

ஜார்ஜியாவின் குழுவில் வந்திருந்த மார்க்கக் கல்வி கற்கின்ற Nanuka என்ற ஒரு மாணவி பைஅத் நிகழ்ச்சியைக் குறித்து கூறுகின்றார்: பைஅத் நிகழ்ச்சி மிகவும் உணர்வுப் பூர்வமான ஒன்றாகும். எனக்கு மார்க்க ஒற்றுமையை பார்ப்பதற்கான சந்தர்ப்பம் கிடைத்தது. மேலும் எவ்வாறு பல்வேறு இனம், நிறத்தைச் சேர்ந்த மக்கள் ஒன்றாக இருக்க முடியும் என்பது தெரிய வந்தது. நான் மார்க்கக் கல்வி கற்று வருகின்றேன். ஜல்ஸாவிற்கு முதல் முறையாக வந்துள்ளேன். இந்த ஜல்ஸா அமைதியை நிலைநாட்டுவதற்கான மிகச்சிறந்த வழியாகும் என்று நான் உறுதியாக நம்புகின்றேன்.

அடுத்த பெண்மணி Nana Kurdiani சாஹிபா கூறுகின்றார்: நான் முஸ்லிமும் அல்ல; கிறித்தவளும் அல்ல; ஆனால் நான் இந்த ஜல்ஸாவிற்கு வந்த பிறகு எனது உள்ளத்தை இஸ்லாத்தின் பக்கம் குனிந்திருப்பதாக உணர்கின்றேன். மேலும் நான் எனது மார்க்கம் தொடர்பாக ஏதாவது முடிவெடுக்க வேண்டும் என்ற நிர்பந்தத்திற்கு ஆளாகியுள்ளேன்.

பிறகு ஜார்ஜியோவின் பல்கலைக்கழக மாணவர் Georjio சாஹிப்; இவர் ஓர் இமாமின் மருமகன் ஆவார்.

அவர் கூறுகின்றார்: நான் பெயரளவில் முஸ்லிம் ஆவேன். ஆனால் இப்போது ஜல்ஸாவில் கலந்து கொண்டு, அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாமின் சொற்பொழிவைக் கேட்ட பிறகு நான் அஹ்மதிய்யா ஜமாஅத்தைப் பற்றி மேலும் அறிந்து கொள்வேன்.

குஸோவோவிலிருந்தும் **45** நபர்களைக் கொண்ட ஒரு குழு வந்திருந்தது. **30** அஹ்மதிகளும், **15** அஹ்மதி அல்லாதவர்களும் இருந்தனர். ஒரு நண்பர் Mr.Shaip Zeqiraji சாஹிப் இரண்டாம் முறையாக ஜல்ஸாவில் கலந்து கொள்கிறார். ஜல்ஸாவில் கலந்து கொண்டதனால் மிக்க மகிழ்ச்சியடைந்தார். ஆனால் பயணத் தொகையைக் கேட்டு மிகவும் கஷ்டத்திற்கு ஆளானார்.

அவர் கூறுகின்றார்: ஜல்ஸாவில் கலந்து கொள்வது, கலீஃபாவை சந்தித்தது ஒரு ஈர்ப்பாக இருந்தது. எனவே நான் எனது மாட்டை விற்று ஜல்ஸாவில் கலந்து கொண்டதற்கான ஆன செலவை பூர்த்தி செய்தேன்.

இவ்வாறும் மக்கள் அஹ்மதியான பிறகு ஜல்ஸாவில் கலந்து கொள்வதற்கு முயற்சி செய்கின்றனர். பழைய காலத்து முன்மாதிரியை இவர்கள் நிலைநாட்டுகின்றனர்.

குஸோவோவின் குழுவில் மிஸ்டர் Skender Asllani என்ற நண்பரும் இருந்தார். அவர் அல்பானியா மொழியின் ஆசிரியர் ஆவார். அவருக்கு இந்த வருடம் பைஅத் செய்வதற்கான நற்பாக்கியமும் கிடைத்தது.

அவர் கூறுகின்றார்: ஜல்ஸாவின் ஏற்பாடுகளில் என்னால் தேடிப் பார்த்தும் எந்த குறையும் தென்படவில்லை. சொற்பொழிவின் தரம் மிக உயர்ந்ததாக இருந்தது. ஹுஸூர் அவர்களின் சொற்பொழிவைக் கேட்டு மிகுந்த தாக்கத்திற்கு ஆளானேன். பைஅத் செய்வது ஓர் அருளாகும். இதற்கு நாம் அனைவரும் கண்ணிமளிக்க வேண்டும். ஏனென்றால் இந்த நிலைமையில் நாம் அனைவரும் ஒரு கையில் ஒன்றினைவதுதான் வெற்றிக்கான திறவுகோளாகும்.

மால்டாவிலிருந்து ஜல்ஸாவில் கலந்து கொண்ட மூன்று பெண்கள் பெண்களின் திடலுக்கும் சென்றனர்.

அவர்கள் கூறுகின்றனர்: எங்களை அதிகமாக கருத்தில் கொள்ளப்பட்டது. பெண்கள் திடலில் குடும்பத்துடன் இருப்பதைப் போன்ற சூழல் இருந்தது. நூற்றாண்டுகளாக ஒருவர் மற்றவரை அறிந்திருப்பதைப் போன்று தோன்றியது. ஆனால் எங்களுக்கோ முதல் முறையாகத் தான் சந்திப்பு ஏற்பட்டுள்ளது. பெண்கள் திடலில் அதிகமான வசதிகள் இருந்தது. இரண்டு திடல்களின் நிலைமைகளையும் பரிசோதித்துப் பார்ப்பதற்கான சந்தர்ப்பம் எங்களுக்கு கிடைத்தது.

இஸ்லாத்தின் போதனைகளுக்கேற்ப ஆண்களுக்கும், பெண்களுக்கும் தனித்தனி ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. இதற்கான உண்மையான தத்துவத்தை எங்களால் புரிந்து கொள்ள முடிந்தது. இப்போது நாங்கள் எங்களுக்கு ஏற்பட்ட அனுபவத்தின் மூலமாக கூற முடியும். அதாவது இஸ்லாமிய போதனை நுட்பமான போதனைகளை உள்ளடக்கியதாகும். மேலும் பெண்கள் தனியாக இருக்கும்போது அதிக மகிழ்ச்சியையும், பாதுகாப்பையும் உணர்கின்றனர். மேலும் அவர்களுக்கு தமது பொறுப்புகளை நிறைவேற்றுவதற்கும், தமது திறமையை வெளிப்படுத்துவதற்கும் சந்தர்ப்பம் கிடைக்கின்றது.

ஆண்களும், பெண்களும் தனியாக இருப்பதற்கான ஏற்பாடுகள் அவசியமாகும் என்பதை இப்போது அந்நியர்களும் உணர்ந்து கொண்டனர். ஆனால் நமது இளைய தலைமுறையினருக்கு ஏன் ஒன்றாக இருப்பதில்லை? என்பது போன்ற எண்ணங்கள் உருவாகின்றது. அவர்களும் இந்த கருத்தை சிந்திக்க வேண்டும்.

மால்டாவிலிருந்து கலந்து கொண்ட ஒரு பெண்; அவர்களுக்கு தற்போதுதான் திருமணமாகி உள்ளது. அவர் கூறுகின்றார்: நீங்கள் பெண்களுக்கு ஆற்றிய உரை என்னுள் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது. ஆண்கள், பெண்கள் ஆகியோருக்கான உரிமைகள் தொடர்பாக நீங்கள் கவனமூட்டினீர்கள். வீட்டில் பிரச்சனைகள் வந்து கொண்டுதான் இருக்கும். இது தொடர்பாக உங்களது இந்த போதனை எப்போதும் பயனளிக்கக் கூடியதாகவே இருக்கும்.

மேலும் கூறுகின்றார்கள்: இஸ்லாத்தில் திருமணத்திற்கு முன்பு பரிசுத்தத்தன்மையை மேற்கொள்ள வேண்டும் என்று கூறியிருப்பது நுட்பம் நிறைந்த போதனையாகும். இது மிக முக்கியமான ஒன்றாகும். ஆன்மீக மற்றும் பௌதீக தூய்மையை மேற்கொள்வது மற்றும் இறையச்சத்தைப் பேணுவது தொடர்பாக எங்களுக்கு வழிகாட்டினீர்கள். அடுத்த ஆண்டு நான் ஜல்ஸாவில் கலந்து கொண்டால் முழு நேரத்தையும் பெண்கள் திடலிலேயே கழிப்பேன். ஏனென்றால் அங்கு எனக்கு கிடைத்த சூழலானது சிறந்த மார்க்க மற்றும் ஆன்மீக சூழலாக இருந்தது.

கிரிகிஸ்தானிலிருந்து வருகை தந்த ஒரு விருந்தாளி கூறுகின்றார்: ஜல்ஸாவில் கலந்து கொண்டு ஒரு வியத்தகு தாக்கம் என்னிடம் இருக்கிறது. அஹ்மதியாக ஆவதற்கு முன்பாக எனக்கு ஒருபோதும் அழுகை வந்தது கிடையாது. காதியான் மற்றும் ஜெர்மனியில்தான் அழுகை வந்தது. உள்ளத்தில் மென்மையும், மாற்றமும் ஏற்பட்டுள்ளதை உணர்கிறேன்.

பைஅத் செய்யக்கூடிய ஒவ்வொருவரின் மூலமாகவும் எனது ஈமான் வலுப்பெறுகிறது. முதலில் நான் மவ்லவியாக இருந்தேன். ஆனால் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் நூல்களைப் படித்த பிறகு திருக்குர்ஆனில் தஜ்ஜால் மற்றும் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தொடர்பாக கூறப்பட்டுள்ள விஷயங்களின் உண்மைத்துவம் தெரிய வந்தது. பைஅத்தின் போது என்மீது குளிர்ந்த தண்ணீர் விழுவதைப் போன்று இருந்தது. இப்போது நான் உண்மையான முஸ்லிமாக ஆகி விட்டேன்.

பிறகு கிர்கிஸ்தானிலிருந்து ஒரு விருந்தினர் Abdussator சாஹிப். அவர் கூறுகின்றார்: நான் அஹ்மதிகள் தொடர்பாக அவர்கள் முஸ்லிம்கள் கிடையாது; மேலும் மதுவை ஆகுமானதாக கருதுகின்றனர் என்று கேள்விப்பட்டிருந்தேன். ஜல்ஸாவில் கலந்து கொள்வதற்கு முன்பாக சுப்ஹான் என்ற அஹ்மதிகளின் பள்ளிவாசலைப் பார்த்தேன். இது ஜெர்மனியில் இருக்கிறது. அதில் தொழுதபோது இவர்கள் முஸ்லிம்கள் என்றும், இஸ்லாத்தின் கோட்பாடுகளை பேணக் கூடியவர்கள் என்றும் தெரிந்து கொண்டேன். ஜல்ஸாவில் கலந்து கொண்டு இவர்கள் இமாம் மஹ்தியை ஏற்றுக் கொள்கின்றனர்; இவர்கள் ஒருபோதும் மது அருந்துவதில்லை; திருக்குர்ஆனின் போதனைகளின்படி செயல்படுகின்றனர் என்பது தெரிய வந்தது. ஜல்ஸாவில் கலந்து கொண்ட பிறகு அஹ்மதிய்யா ஜமாஅத்தைப் பற்றி அதிக தகவல்கள் கிடைத்தது. மேலும் நான் உங்களை முஸ்லிமாக கருதுகின்றேன். இங்கு நான் ஹஜ்ஜிற்குப் பிறகு இவ்வளவு எண்ணிக்கையை கொண்ட மக்கள் ஒன்று கூடுவதை நான் பார்க்கின்றேன்.

லத்வீனியாவிலிருந்து 58 நபர்களைக் கொண்ட ஒரு குழு வந்திருந்தது. 40 பேர் அஹ்மதியல்லாதவர்கள்; 12 அஹ்மதிகள். அவர்களில் பித்ரஸ் என்பவர் தமது கருத்தை தெரிவிக்கிறார்: ஜல்ஸாவிற்கு வருவதற்கு முன்பாக எனது எண்ணம் சிறந்ததாக இருக்கவில்லை. ஆனால் ஜல்ஸாவில் கலந்து கொண்ட பிறகு இஸ்லாம் தொடர்பாக எனது எண்ணம் நல்லதாக அமைந்தது. முஸ்லிம்கள் தமது கொள்கைகளில் பக்குவம் அடைந்தவர்கள் ஆவர் என்பது ஜல்ஸாவில் கலந்து கொண்ட பிறகு நான் உணர்ந்தேன். இன்னும் சொல்வதென்றால் கிறித்தவர்களை விட பக்குவமானவர்கள் என்றே நான் கூறுவேன்.

பிறகு லத்வீனியாவிலிருந்து வந்த முனீஃபா சாஹிபா கூறுகின்றார்கள்: சில முஸ்லிம்கள் மார்க்க ரீதியாக சிலரிடம் சகிப்புத்தன்மையை வெளிப்படுத்தாமல் இருந்தமையால் ஜல்ஸாவில் கலந்து கொள்வதற்கு முன்பாக இஸ்லாம் தொடர்பாக என்னிடம் இருந்த குழப்பங்கள் ஜல்ஸாவில் கலந்து கொண்ட பிறகு அஹ்மதி முஸ்லிம்கள் மற்றவர்களின் கருத்து மற்றும் அவர்களுக்குரிய கொள்கைகக்கு கண்ணியம் அளிக்கக் கூடியவர்கள் என்றும், மனித இனத்திடம் அன்பை பகிர்ந்தளிக்கக் கூடியவர்கள் என்றும் தெரிய வந்தது.

லத்வீனியாவிலிருந்து Sarunas சாஹிப் வந்திருந்தார். அவர் கூறுகின்றார்: ஜல்ஸா ஸாலானா மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும். ஏனென்றால் இதன் மூலம் இஸ்லாத்தின் அமைதி நிறைந்த போதனை தெரிய வருகின்றது. மேலும் இஸ்லாம் தொடர்பாக இருக்கின்ற தவறான எண்ணங்கள் அகற்றப்படுகின்றன.

ஜனவரி 2019ல் பைஅத் செய்த சிரியாவின் ஒரு நண்பர் தமது பைஅத் சம்பவத்தைப் பற்றி எடுத்துக் கூறியவாறு கூறுகின்றார்: அதாவது அவரது தந்தை 2008 ல் சிரியாவில் பைஅத் செய்தார். பிறகு ஒரு சகோதரரும் பைஅத் செய்து விட்டார். ஆனால் நான் மூன்று முறை ஜல்ஸாவிற்கு வந்துள்ளேன். மக்கள் அழுது கொண்டிருப்பதைக் கண்டு ஆச்சரியப்பட்டேன். மேலும் இந்த மக்கள் ஏன் அழுகின்றனர்? என்று நான் சிரித்தேன். ஆனால் நான் எதிர்ப்பை வெளிப்படுத்தவில்லை. பைஅத்தும் செய்யவில்லை. பிறகு இறைவனிடம், இந்த ஜமாஅத் உண்மையென்றால் நீயே எனக்கு வழிகாட்டுவாயாக என்று துஆ செய்தேன். அப்போது நான் கனவில் கண்டேன். அதாவது ஏதோவொரு இடத்தில் சந்திப்பிற்கான சந்தர்ப்பம் இருக்கிறது. மக்கள் அமர்ந்துள்ளனர். நான் முதல் வரிசையில் அமர்ந்துள்ளேன். அனைத்து நண்பர்களும் அமைதியாக இருந்தனர்.

அவர் கூறுகின்றார்: நீங்கள் வருகின்றீர்கள். அப்போது நான் என்னை கட்டுப்படுத்திக் கொள்ள முடியாமல் அழுகின்றேன். நான் அவர்களை எனக்கு அருகில் அழைத்து என் பக்கம் வந்து அமருங்கள் என்று அன்பாக கூறுகின்றேன்.

அவர் கூறுகின்றார்: நான் கண்விழித்தபோது பைஅத் செய்வதற்கு ஆயத்தமானேன். பைஅத்தும் செய்தேன். (இந்த சம்பவத்தை அவர் மிகவும் உணர்வுப் பூர்வமாக எடுத்துரைத்தார்.)

பெல்ஜியத்திலிருந்து வருகை தந்த பாலன் சாஹிப் என்ற விருந்தாளி. அவர் கூறுகின்றார்: நான் சில மாதத்திற்கு முன்பாக பைஅத் செய்தேன். முதல் முறையாக ஜல்ஸாவில் கலந்து கொண்டேன். இந்த ஜல்ஸாவில் கலந்து கொண்டு இந்த அளவுக்கு சகோதரத்துவத்தின் அழகிய தோற்றம் இருப்பதைப் பார்த்து வியப்பிற்குள்ளானேன். முதலில் நான் இது தொடர்பாக கேள்விப்பட்டிருந்தேன். ஆனால் அதன் உண்மையான தோற்றத்தை ஜல்ஸாவில் பார்க்க கிடைத்தது. இந்த ஆன்மீக சுற்றுச்சூழலில் கலந்து கொண்டது எனது நற்பேறாகும்.

சினிகாலிருந்து ஒரு விருந்தினர் வந்திருந்தார். அவர் கூறுகின்றார்: உங்களை சந்தித்து மிக்க மகிழ்ச்சியடைந்தேன். உங்களது அமைதியின் சொற்பொழிவினால் மிகுந்த தாக்கத்திற்கு ஆளாகியுள்ளேன். நான் ஜல்ஸாவை பார்க்காமலும், உங்களை சந்திக்காமலும் இருந்திருந்தால் பிறகு எனது வாழ்க்கையில் மிகப்பெரிய ஒன்றை இழந்ததைப் போன்று உணர்ந்திருப்பேன். ஆனால் இன்று எனது வாழ்க்கையின் நோக்கம் முழுமையடைந்து விட்டது என்று நான் உணர்கின்றேன்.

அவர்கள் ஒரு கப்பலை தம்மிடம் வைத்திருந்தார்கள். அதைப் பற்றி நான் அவர்களிடம் கேட்டதற்கு, இதனை உங்களுக்கு அன்பளிப்பு வழங்குவதற்காக நான் கொண்டு வந்துள்ளேன் என்று கூறினார்கள். மேலும் இது அமைதியின் கப்பலாகும். எல்லோரிடத்தும் அன்பு; எவரிடத்தும் இல்லை வெறுப்பு என்ற கப்பலாகும். இதில் எவர் பயணம் செய்வாரோ அவரோ அமைதியைப் பெறுவார். இது அஹ்மதிய்யத்தின் கப்பலாகும் என்று கூறினர்.

மேலும் அவர் கப்பலை அன்பளிப்பாக வழங்கியதன் நோக்கம் இதுவும் ஆகும். அதாவது எங்களது நாட்டின் முன்னேற்றம் இத்துடன் தொடர்புடையதாக இருக்கின்றது. எனவே எங்கள் நாட்டிற்காகவும் அதிகமாக துஆ செய்யுங்கள் என்று கூறினார்.

பிறகு அவர்களுடன் இன்னொருவரும் வந்திருந்தார். அவர் டைரக்டர் ஆவார். அவர் நமது மருத்துவமனை தொடர்பாகவும் நன்றி தெரிவித்தார். இங்கு வந்து பலதையும் பார்த்ததாக அவர் தெரிவித்தார்.

அவர் கூறுகிறார்: நான் உலகத்தில் பல நாடுகளைக் கண்டுள்ளேன். மார்க்க மற்றும் அரசியல் நிகழ்ச்சிகளையும் கண்டுள்ளேன். அமெரிக்கா, ஐரோப்பா போன்ற அனைத்து இடங்களுக்கும் சென்றுள்ளேன். ஆனால் இன்று வரை இத்தகைய அமைப்பு மற்றும் இஸ்லாம் மற்றும் இஸ்லாத்தின் உண்மையான தோற்றத்தை பார்த்தது கிடையாது. இங்கு மக்களிடம் நான் கண்ட கட்டுப்படுதலை வேறு எங்கும் நான் கண்டதில்லை. மேலும் கலீஃபாவோடு, கிலாஃபத்தோடு இந்த மக்கள் கொண்டிருக்கின்ற அன்பைப் போன்று உலகத்தில் வேறு எந்த மார்க்க மற்றும் அரசியல் தலைவர்களை நேசிப்பவர்களை நான் கண்டதில்லை. மேலும் நான் கண்ட இந்த உண்மையை உள்ளத்தால் ஏற்றுக் கொள்கின்றேன். இது எத்தகைய உண்மை என்றால் இதனை எவராலும் நிராகரிக்க முடியாது. நாமும் நமது உள்ளமும் இன்று முதல் உங்களுடன் இருக்கிறது. நீங்கள் கூறியவற்றை நாங்கள் செவியேற்றோம். அதன்படி செயல்பட முயற்சி செய்வோம்.

போஸ்னியாவிலிருந்து 74 நபர்களைக் கொண்ட ஒரு குழு வந்திருந்தது. Yasmin Spahich சாஹிப் அவர்களின் தலைவர் ஆவார். அவர் கூறுகின்றார்: உங்களது இஸ்லாம், இஸ்லாத்தின் ஸ்தாபகர் மீது நீங்கள் கொண்டிருக்கின்ற அன்பு, மேலும் இந்த அன்பின்

உணர்வு உங்களது சொல்லிலிருந்து வெளிப்படுகிறது. மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அருளுக்குரிய வாழ்க்கை உள்ளத்தை தொட்டது. இந்த பணியைத் தான் பெருமானார் (ஸல்) அவர்கள் செய்து வந்தார்கள்.

அவர் கூறுகின்றார்: இந்த ஜல்ஸா இதை விட சிறந்ததாக இருக்கட்டுமாக. மேலும் முஹம்மதிய்ய சமுதாயத்திடம் ஆற்றலை உருவாக்குவதற்குரிய காரணியாக அமையட்டுமாக.

Emina Chaoshevich சாஹிபா கூறுகின்றார்: ஜல்ஸாவில் கலந்து கொண்டு இதில் ஒரு ஆற்றலும், தாக்கமும் இருப்பதையும், ஆன்மீகமான முறையில் மரணித்தவர்களை உயிர்ப்பிக்கக்கூடியதாக இருப்பதையும் நான் உணர்ந்தேன்.

பிறகு Elma Krehmiche சாஹிபா கூறுகின்றார்: நான் இந்த சந்தர்ப்பத்திலிருந்து பயன் பெற்றவாறு இந்த மகத்துவமிக்க ஜல்ஸாவில் கலந்து கொள்வதற்காக என்னை அழைத்தமைக்கு அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கு நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றேன். விருந்து உபசரிப்பு மற்றும் ஏற்பாடுகள் ஆகியவை எனக்கு வியத்தகு ஆச்சரியத்தை ஏற்படுத்தியது. குறிப்பாக எனது இந்த வாரத்தின் இறுதி நாட்கள் எப்போதும் புன்சிரிப்புடன் இருக்கின்ற மக்களுடன் கழிந்தது.

பைஅத் நிகழ்ச்சியின் போது **16** நாட்டின் பிரதிநிதிகளைச் சேர்ந்த **37** நபர்கள் பைஅத் செய்யும் நற்பேற்றைப் பெற்றனர். இதில் அல்பானியா, சர்பியா, ஹாலந்து, ஜெர்மனி, செஷ்னியா, ரோமானியா, கோஸோவோ, பெல்ஜியம், சிரியா, துருக்கி, லப்னான், செனிகால், கானா, கேம்பியா, கினிகனாகிரி போன்ற நாடுகள் அடங்கும்.

கோஸோவோவிலிருந்து ஒரு நண்பர் மிஸ்டர் Labinot வந்திருந்தார்கள். அவர் கூறுகின்றார்: ஜல்ஸா ஸாலானா என்னிடம் ஒரு குறிப்பான தாக்கத்தை விட்டுச் சென்றுள்ளது. குறிப்பாக, நீங்கள் அங்கிருந்தவர்களை அமருங்கள் என்று கூறியதும் அவர்கள் அனைவரும் அமர்ந்து விட்டனர். இத்தகு காட்சியை உலகத்தில் வேறு எங்கும் நான் பார்க்கவில்லை. ஜல்ஸா **3** நாட்களுக்காக அல்லாமல் **30** நாட்களுக்கு நடத்தப்பட வேண்டும். மேலும் பைஅத் செய்வது எனது நோக்கமாக இருக்கவில்லை. ஆனால் அனைத்து விஷயங்களினாலும் நான் எந்த அளவிற்கு தாக்கத்திற்கு ஆளாகியுள்ளேன் என்றால் மேலும் பைஅத்தின் போது என்னிடம் எத்தகைய தாக்கம் ஏற்பட்டதென்றால் எனது கைகள் தானாகவே முன் வந்தது. மேலும் நான் பைஅத்தின் வார்த்தைகளைக் கூற ஆரம்பித்தேன். இவ்வாறு நான் வெளிப்படையாக அல்லாமல் உண்மையான முறையில் பைஅத்தும் செய்து விட்டேன்.

அடுத்து ஆகாஸிப் சாஹிப் அவர்கள் கூறுகின்றார்: நான் ஆன்மீகத்தில் இந்த அளவுக்கு உயர்வான இடத்தை அடைவேன் என்று எண்ணியது கூட கிடையாது. முரப்பி மஹ்மூது சாஹிப் அவர்கள் ஜமாஅத்தின் அறிமுகத்தையும், கொள்கையையும் என்னிடம் எடுத்துக் கூற ஆரம்பித்தார்கள். அவை அனைத்தும் சுயமே உருவாக்கப்பட்ட கதைகளைப் போன்று எனக்கு தோன்றியது. நான் இந்த விஷயத்தைக் கேட்ட உடனேயே மறுத்து விட்டேன். ஆனால் உண்மையின் தாக்கமானது விரைவில் அது தன் பக்கம் ஈர்த்து விடும் என்பதை அறியாதவனாக இருந்தேன்.

நிச்சயமாக ஜமாஅத் தருகின்ற ஆதாரமும் உறுதி வாய்ந்ததும், உண்மையும் ஆகும். வீடியோவில் பார்த்த விஷயங்களை இங்கு வந்து நேரில் பார்ப்பதற்கான சந்தர்ப்பம் கிடைத்தது. ஜல்ஸாவில் அதிமான நபர்களை சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. எத்தனை நபர்களை சந்தித்திருந்தாலும் ஒரே இயல்பைக் கொண்டவர்களை சந்திப்பது போன்று தோன்றியது. இது நிச்சயமாக இந்த ஜமாஅத் உண்மை என்பதற்கு ஆதாரமாகும். அல்லாஹ் உங்களது கைகளில் பைஅத் செய்வதற்கான நற்பாக்கியத்தை எனக்கு வழங்கினான். முதல் முறையாக என்னிடம் கூறப்பட்டபோது எனக்கு நம்பிக்கை ஏற்படவில்லை. நான் மீண்டும் மீண்டும் நான் கலீஃபாவின் கைகளிலா பைஅத் செய்வேன்? என்று கேட்டேன். எனது கண்களில் கண்ணீர் வழிந்தோடியது. அத்துடன் நான் இதற்கு தகுதியற்றவன் என்று எண்ணி கவலைக்கும் ஆளானேன். பிறகு நான் தரூதும், இஸ்திஃபாரும் படிக்க ஆரம்பித்தேன். பைஅத் சந்தர்ப்பம் வரை என்னால் எதையும் உண்ணவும், பருகவும் முடியவில்லை. அல்ஹம்துலில்லாஹ் பைஅத் சந்தர்ப்பமும் வந்தது.

அல்லாஹ் எனக்கு எத்தகைய ஆற்றலையும், ஆன்மீகத்திற்கான சந்தர்ப்பத்தையும் வழங்கினான் என்றால் நான் பைஅத்திற்குப் பிறகு சஜ்தாவில் விழுந்து விட்டேன். மேலும் என்னைப் போன்ற ஒன்றுமற்றவனுக்கு உங்களது கரங்களில் பைஅத் செய்வதற்கு பாக்கியத்தை வழங்கிய அந்த இருப்பிற்கு நான் நன்றி தெரிவித்தேன். ஜல்ஸாவிற்குப் பிறகு சந்திப்பிற்கான வாய்ப்பும் கிடைக்கும் என நான் அறிந்தேன்.

நான் பல கேள்விகளை சிந்தித்துக் கொண்டிருந்தேன். ஆனால் உங்களை சந்தித்த போது அனைத்தையும் மறந்து விட்டேன். ஆனால் மிகவும் கவலையில் ஆழ்த்தக்கூடிய இந்த கேள்வி மட்டுமே நினைவில் இருந்தது. அதாவது ஜல்ஸாவிற்குப் பிறகு எங்களது நாட்டிற்குச் சென்ற பிறகு ஆன்மீகத்தின் தரம் நிலைபெற்றிருக்குமா? என்று நான் உங்களிடம் கேட்டபோது அதற்கு நீங்கள், இதை நிலைபெறச் செய்வதற்காக சூரா ஃபாத்திஹா, இஹ்தினஸ்ஸிராத்தல் முஸ்தகீம், ஸிராதல்லதீன அன்அம்த அலைஹிம் மற்றும் இஸ்திஃபார் போன்ற துஆக்களை தொடர்ச்சியாக ஓதி வாருங்கள் என்று கூறினீர்கள்.

அவர் கூறுகின்றார்: நான் இங்கிருந்து பைஅத் செய்து செல்கின்றேன். மேலும் அடுத்த ஜல்ஸா வரை இந்த விஷயத்தை பின்பற்றி நடப்பேன். மேலும் அடுத்த ஜல்ஸாவில் இதன்படி நான் செயல்பட்டு வந்தேன் என்று உங்களிடம் கூறுவேன். அல்லாஹ் இவர்களை கலப்பற்றதன்மையிலும், பற்றுணர்விலும் முன்னேறச் செய்வானாக.

கோஸோவோவிலிருந்து வந்த குழுவில் ஒரு நண்பர் இதற்கு முன்பும் ஜல்ஸாவில் கலந்து கொண்டார். அவர் கூறுகின்றார்: எனது உணர்வுகளை சொற்களால் என்னால் எடுத்துக் கூற முடியாது. எனது வாழ்நாளில் நீண்ட காலமாக, எனக்கு உலகத்திற்காக கவலை கொள்ளக்கூடிய ஒரு இருப்பு கிடைக்க வேண்டும் என்று மேலும் அவரைச் சந்தித்து எனது அனைத்து பிரச்சனைகளும், கஷ்டங்களும் தீர்ந்து விட வேண்டும் என்பது எனது விருப்பமாக இருந்தது. நான் ஜல்ஸாவில் கலந்து கொண்டது இறைவனது திட்டத்திற்கேற்ப ஆகும். பைஅத் செய்யும்போது நான் இறைவனுக்கு அருகில் வந்து விட்டதைப் போன்று உணர்ந்தேன்.

பிறகு அல்பானியாவின் Pellumb சாஹிப் அவர்கள் கூறுகின்றார்கள்: நான் உங்களது கரங்களில் பைஅத் செய்து ஜமாஅத்தில் இணையும் நற்பேற்றைப் பெற்றேன். இதற்காக நான் அல்லாஹ்விற்கு நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன். அவன் எனக்கு அஹ்மதிய்யதில் இணைவதற்கான நற்பாக்கியத்தை வழங்கியுள்ளான்.

மேலும் கூறுகின்றார்: ஒரு வருடத்திற்கு முன்பாக நான் ஈமான் அற்றவனாக இருந்தேன். இந்த வருடம் எனக்கு அல்லாஹ் ஈமான் என்ற செல்வத்தை வழங்கியுள்ளான். எனது பிறப்பும் எனது வளர்ப்பும் மார்க்க சூழல் அற்ற இடத்தில் அமைந்திருந்தது. ஆனால் ஜல்ஸாவில் கலந்து கொண்டது, மேலும் உங்களை சந்தித்ததன் மூலம் அல்லாஹ் எனக்கு ஈமானை வழங்கினான்.

டாக்டர் முஹம்மது சாஹிப் அவர்கள் கூறுகின்றார்கள்: நான் இரண்டு வருடத்திற்கு முன்பாக முதல் முறையாக ஜல்ஸாவிற்கு

வந்தேன். எனக்கு மிகவும் வியப்பு ஏற்பட்டது. அனைத்தும் புதிய விஷயமாக தோன்றியது. அதாவது அஹ்மதிகள் மஸீஹ், மஹ்தி தோன்றி விட்டார் என்று கூறுகின்றனர். ஆனால் இதனைப் பற்றிய அறிவு நமக்கு இல்லை. எனது சிந்தனையில் நாம் இதைத் தான் படித்தோம்; கற்றோம் என்ற பல கேள்விகள் எழுந்தன. அதாவது மஹ்தி அரபிகளைச் சார்ந்தவராக இருப்பார்; மேலும் அவரது பெயர் முஹம்மது பின் அப்துல்லாஹ் –வாக இருக்கும். மேலும் இந்த ஜமாஅத் மார்க்க ஜமாஅத்தா? அல்லது அரசியல் ஜமாஅத்தா?

இவ்வாறு பல கேள்விகள் எனது சிந்தனையின் தோன்றின. இந்த கேள்விகளுக்கான பதிலை பெறுவதற்கான நான் அடுத்த ஆண்டும் ஜல்ஸாவிற்கு வந்தேன். மேலும் அஹ்மதி நண்பர்களுடன் பல தலைப்புகளில் பேசினேன். ஜல்ஸாவிற்குப் பிறகும் எனது தொடர்பு அஹ்மதிகளுடன் இருந்தது. மெதுமெதுவாக எனது அனைத்து கேள்விகளுக்கும் பதில் கிடைத்தது. இறுதியாக அஹ்மதிகள் தான் உண்மையான முஸ்லிமின் அனைத்து பண்புகளையும் தன்னுள் கொண்டுள்ளார்கள் என்பதை நான் அறிந்து கொண்டேன். எனவே நான் ஜமாஅத்தின் அன்பு மற்றும் நேசத்தின் தாக்கத்திற்கு ஆளாகி பைஅத் செய்ய முடிவெடுத்தேன்.

மேலும் கூறுகின்றார்கள்: ஜமாஅத் மக்களின் உள்ளங்களில் உள்ள அன்பு மற்றும் நேசத்தின் விதையை இவர்களது உள்ளத்தில் இறைவன் நடவில்லை என்றால் பிறகு ஒருபோதும் இந்த அன்பு ஏற்பட்டிருக்காது.

அவர் கூறுகின்றார்: எனக்கு காலத்தின் கலீஃபாவின் கரங்களில் பைஅத் செய்வதற்கான நற்பாக்கியம் கிடைத்தது. மேலும் பைஅத்தின் சொற்களை எடுத்துக் கூறும்போது இருந்த உணர்வைப் பற்றி எடுத்துக் கூறுவது மிகவும் கடினமாகும். காலத்தின் கலீஃபாவின் கரங்களில் பைஅத் செய்த நான் நற்பேறு பெற்றவன் ஆவேன்.

மேலும் கூறுகின்றார்: பைஅத் ஐந்து மணி நேரம் வரை தொடர்ந்து இருந்திருந்தாலும் அதனால் எனக்கு சலிப்பு ஏற்பட்டிருக்காது. மேலும் நேரம் கழிந்ததற்கான உணர்வும் இருந்திருக்காது.

கேஸோவேவிலிருந்து ஒரு நண்பர் முதல் முறையாக வந்துள்ளார். ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட அவரது குடும்பத்தினருக்கு பைஅத் செய்வதற்கான பாக்கியம் கிடைத்தது. அவர் கூறுகின்றார்: எவ்வாறு பைஅத் நடைபெறும் என்று நான் முதலில் அஞ்சிக் கொண்டிருந்தேன். உடல் நடுங்கிக் கொண்டிருந்தது. ஆனால் பைஅத் செய்த பிறகு நிம்மதி ஏற்பட்டது. அனைத்தும் நார்மலாகி விட்டது என்ற உணர்வு ஏற்பட்டது.

லப்னானைச் சேர்ந்த கமால் லவான் சாஹிப் கூறுகின்றார்: என்னிடம் ஒரு ரெஸ்டோரன்ட் இருக்கிறது. அதில் முஹம்மது ஷாது என்ற ஓர் அஹ்மதி நண்பர் வருவார். அவர் ஒரு நாள் என்னிடம், நான் உங்களுக்கு ஒரு விஷயத்தை கூற விரும்புகின்றேன். அது இமாம் மஹ்தி வந்து விட்டார். மேலும அவர் மரணமடைந்தும் விட்டார் என்பதாகும். அவர் திரும்பிச் சென்ற பிறகு நான் அந்த நபர் யார் என்று சிந்தித்தேன். பிறகு சிறிது நாட்களுக்குப் மீண்டும் வந்து அந்த அஹ்மதி, இமாம் மஹ்தி வந்து விட்டார் என்று கூறினார்.

மேலும் ஒரு நாள் அவர் என்னிடம் தஜ்ஜால் மற்றும் மஸீஹ் தொடர்பாக சில விஷயங்களைப் பற்றி விளக்கமாக கூறினார். இது எனக்கு மிகவும் வியப்பிற்குரிய தகவலாக இருந்தது. மேலும் அது எனது உள்ளத்தில் நிலைபெற்று விட்டது. மேலும் நான் ஜமாஅத்தைப் பற்றி மேலும் தெரிந்து கொள்ள வேண்டும் என்று எனது உள்ளத்தில் உதித்தது. பிறகு அவர் எனக்கு ஜல்ஸாவிற்கு அழைப்பு கொடுத்தார். நான் அதை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டேன்.

அவர் கூறுகின்றார்: ஜல்ஸாவில் எனக்கு முதலாவதாக ஜமாஅத்தின் உண்மை இதன் மூலம் வெளிப்பட்டது. அதாவது இவ்வளவு பெரிய எண்ணிக்கை மற்றும் அதன் அழகிய ஏற்பாடுகள் ஆகும். ஜல்ஸாவின் போது ஒரு நண்பர் என்னிடம், இவர் முஸ்லிம்களின் கலீஃபா ஆவார் என்று கூறினார். பிறகு நான் அஹ்மதிகளிடம் பல கேள்விகளைக் கேட்டேன். அதற்கு அவர்கள் மிகவும் அன்புடன் பதிலளித்தார்கள். இதன் மூலம் அஹ்மதிய்யத்தின் உண்மைத்துவத்தை உள்ளம் ஏற்றுக் கொண்டே சென்றது. எனவே அடுத்த வருடம் வரை நான் உயிருடன் இருப்பேனோ? இருக்க மாட்டேனோ? என்பது எனக்குத் தெரியாது என்று எண்ணி நான் பைஅத் செய்து விட்டேன்.

அதே போன்று எனது இரண்டு கனவுகள் ஜமாஅத்தின் உண்மைத்துவத்திற்கு காரணமாக அமைந்தது. அல்லாஹ்வின் அருளால் எனது முதல் மகன் பைஅத் செய்து விட்டார். மேலும் எனது மற்ற குழந்தைகளும் அஹ்மதியாக வேண்டும் என்பது எனது விருப்பமாகும். நான் ஹிவாருல் முபாஷிர் மற்றும் குத்பா ஜுமுஆவை கவனத்துடன் பார்த்து வருகின்றேன். எனது பார்வையில் பைஅத்தின் பத்து நிபந்தனைகள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சில நிபந்தனைகள் மட்டுமல்ல. மாறாக இது இறைவனின் செயல் திட்டமாகும்.

பைஅத்திற்கு முன்பு, இறைவா! எனக்கு இமாம் மஹ்தியை பார்ப்பதற்கான நற்பாக்கியத்தை வழங்குவாயாக என்று துஆ செய்து வந்தேன். ஜமாஅத்தின்றி கழிந்த எனது கழிந்த வாழ்க்கையின் மீது எனக்கு வெட்கம் ஏற்படுகிறது. எனவே நான் ஒவ்வொரு அஹ்மதிக்கும் உளப்பூர்வமாக கண்ணியம் அளிக்கின்றேன். ஏனென்றால் இந்த மக்கள் முஹம்மது (ஸல்) அவர்களின் மார்க்கத்திற்காக தொண்டாற்றுகின்றார்கள். இப்போது எனக்கு எனது மனைவி மக்களுக்காக பணி செய்ய வேண்டும் என்ற கவலை இல்லை. மாறாக, என்னிடம் எந்த அளவுக்கு பணம் இருக்க வேண்டுமென்றால் அதனைக் கொண்டு நான் ஜமாஅத்தின் முன்னேற்றத்திற்காக செலவு செய்ய வேண்டும் மற்றும் ஜமாஅத்திற்காக தொண்டாற்ற வேண்டும் என்ற கவலையே என்னை சூழ்ந்துள்ளது. அல்லாஹ் எனது விருப்பத்தை ஏற்றுக் கொள்வானாக.

பிறகு ஃபவாத் சாஹிப் கூறுகின்றார்: ஜமாஅத் அறிமுகம் ஆவதற்கு முன்பாக நான் அல்லாஹ்வின் மகத்துவம் தொடர்பாக சிந்தித்து வருவேன். மேலும் அன்றாடம் வீழ்ந்து கொண்டிருக்கின்ற முஸ்லிம்களின் நிலையின் மீது பார்வையை செலுத்தியவாறு இவர்களது நிலைமை எப்போது சரியாகும் என்று சிந்தித்து வந்தேன். பிறகு நான் ஜெர்மனி வந்து விட்டேன். நான் ஐரோப்பாவில்

## திருக்குர்ஆனிலிருந்து...

என் இறைவா! இதை அமைதி நிறைந்த நகரமாக விளங்கச் செய்வாயாக. இதில் வாழ்பவர்களுள் அல்லாஹ்விடத்தும், வரக்கூடிய நாளிடத்தும் நம்பிக்கை கொள்பவர்களுக்கு (எல்லா வகையான) கனிகளையும் வழங்குவாயாக என்று இப்ராஹீம் கூறிய நேரத்தையும் (எண்ணிப் பாருங்கள்). (2:127)

Faizal Hameed Ilahi
மற்றும் குடும்பத்தினர், திட்டச்சேரி.

O.A. NIJAM 99947 57172 V.A. SAIT 99430 30230
O.A.N. DOORS & STEELS

All Types of wooden Doors, Skin Doors Steal Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Construction Chemicals.
5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
(opp. Karuna Clinic) Tirunelveli - 627 005.

EDITOR
Moulvai.O.M. MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB EDITOR
Muallim. A. KHALEEL AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly **BADAR** Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2017-2019 Vol. 4 Thursday 15-22 Aug 2019 Issue No. 33-34

MANAGER
NAWAB AHMAD
Tel. : +91 1872-224757
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.500/- (Per Issue Rs. 9/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

இருக்கின்ற அரபி நண்பர்களைப் பார்த்து இவர்கள் மூலமாக இஸ்லாம் பரவும் என்று நினைத்தேன். அப்போது ஓர் அஹ்மதி நண்பருடன் எனது சந்திப்பு நிகழ்ந்தது. அவர் ஜமாஅத்தைப் பற்றி என்னிடம் கூற ஆரம்பித்தார். ஆரம்பத்தில் நான் அவரை எதிர்த்தேன். ஆனால் ஜமாஅத்தின் நூல்களைப் படித்த பிறகு ஜல்ஸாவில் கலந்து கொள்ள எண்ணம் கொண்டேன். நான் ஜல்ஸாவை பார்த்தேன். மேலும் எந்த அளவுக்கு மக்கள் இருக்கின்றனர். மேலும் அவர்கள் ஒரு நபரது கைகளில் ஒன்றினைந்து உள்ளார்கள் என்றும், மேலும் ஒருவர் மற்றவருக்கிடையில் அன்பு மற்றும் நேசத்தின் தொடர்பையும் நிலைநாட்டியுள்ளார்கள் என்பதை சிந்தித்தேன். நான் தஹஜ்ஜுத் தொழுகையில் அதிகமாக துஆ செய்தேன். அதாவது அல்லாஹ்வே! இந்த ஜமாஅத் உண்மை என்றால் நீ இந்த ஜல்ஸாவிலேயே (அதாவது 2018 ஆம் ஆண்டு ஜல்ஸா) பைஅத் செய்வதற்கு நற்பாக்கியத்தை வழங்குவாயாக.

ஆக இந்த ஜல்ஸாவில் எனது உள்ளம் நிம்மதி பெற்று விட்டது. நான் பைஅத் செய்து விட்டேன். ஆனால் எனது மனைவி பைஅத் செய்ய மறுத்து விட்டார். மேலும் நீங்கள் இந்தப் புத்தகங்களை படியுங்கள். மேலும் இறைவனிடம் இஸ்திஹாரா செய்யுங்கள் என்று நான் புரிய வைத்தேன். மூன்று மாதங்கள் என் மனைவி இஸ்திஹாரா செய்தார். மேலும் கனவில் கண்டார். அதாவது மக்கள் ஒன்று கூடியுள்ளனர். ஒரு வெள்ளைப் புறா அவர்களிடையே இருக்கின்றது. எனது மனைவி, இந்த புறா என்ன? என்று கேட்டார். அதற்கு அவர்களில் ஒரு நபர், இந்த புறா இஸ்லாத்தைப் பரப்புவதற்கு குதுஸ் பகுதிக்கு வந்துள்ளது என்று கூறினார்.

இந்தக் கனவு எனது மனைவியின் உள்ளத்தை திறந்தது. மேலும் இந்த 2019 ஆம் ஆண்டு ஜல்ஸாவில் கலந்து கொண்டு பைஅத்தும் செய்து விட்டார்.

மேலும் கூறுகின்றார்: அல்லாஹ் எனது குடும்பத்தைச் சார்ந்த அனைவருக்கும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் பைஅத் செய்யும் நற்பேற்றை வழங்கியமையால் நான் மிக்க மகிழ்ச்சியில் உள்ளேன். இப்போது நான் எனது அனைத்து உறவினர்களுக்கும் தப்லீக் செய்வேன்.

ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த சாமிர் சாஹிபா என்ற விருந்தாளி கூறுகின்றார்கள்: ஜெர்மனி ஜல்ஸாவின் போது ஜூலை 7 அன்று நான் பைஅத் செய்தேன். நான் துஆவிற்காக கேட்டுக் கொள்கின்றேன். அதாவது எனது பைஅத் அருளுக்குரியதாக இருக்கட்டுமாக. மேலும் எனது ஏதாவதொரு தவறு இந்த உடன்படிக்கையை முறித்து விடாதிருக்கட்டுமாக. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இஸ்லாமிய போதனைகளின் தத்துவஞானத்தில் குறிப்பிட்டுள்ளதற்கேற்ப நான் என்னிடத்தில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு அல்லாஹ் பாக்கியத்தை வழங்குவானாக.

மேலும் கூறுகின்றார்: நான் எனது குடும்பத்துடன் 2011 லிருந்து அஹ்மதியாக இருக்கின்றேன். இரண்டு மாதங்கள் அஹ்மதியாக இருந்தார்கள். ஆனால் பைஅத் படிவத்தை நிரப்பவில்லை. தம்மைத்தாமே அஹ்மதி என்று கருதி வந்தார்கள்.

கூறுகின்றார்கள்: 18 வயது ஆன பிறகு நானே பைஅத் செய்ய வேண்டும் என்பது எனது விருப்பமாகும். நான் 2011 லிருந்து எனது பைஅத் படிவத்தை பாதுகாப்பாக வைத்துள்ளேன். நான் உங்களது கரங்களில் பைஅத் செய்ய வேண்டும் என்று விரும்பினேன். எனவே இந்த வருடம் எனது விருப்பம் முழுமையடைந்தது.

இப்போது அவர்கள் விருந்தினர்களுக்கு தப்லீக்கும் செய்து வருகின்றார்கள். ஆக அல்லாஹ் இளைஞர்களின் உள்ளத்தையும் திறக்கின்றான்.

ஒரு சிறுமி தமது கருத்தை தெரிவிக்கின்றார்: எனது தாய் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்டு விட்டார். ஆனால் அப்போது நான் பைஅத் செய்ய ஆயத்தமாக இருக்கவில்லை. நான் அஹ்மதிகளிடம் இருக்கின்ற அன்பு மற்றும் நேசத்தைப் பார்க்கின்றேன். மேலும் இன்று உங்களது சொற்பொழிவைக் கேட்டு எனது அனைத்து அச்சங்களும் அகன்று விட்டன. கடந்த வருடமும் நான் வந்திருந்தேன். ஆனால் இன்று இருக்கின்ற நிலை அப்போது இருக்கவில்லை. எனது தாய் மிகுந்த மகிழ்ச்சியடைவார். நான் அஹ்மதியாக வேண்டும் என்ற உணர்வு மிகுதியாகவே என்னிடம் உருவாகியுள்ளது.

ஜார்ஜியாவிலிருந்து வந்து ஒரு வக்கீல் அவர் பல்கலைகழகத்தின் லெக்சரரும் ஆவார். பைஅத் நிகழ்ச்சிகளைப் பார்த்து அவர் கூறுகின்றார்: நான் மிகுந்த தாக்கத்திற்கு ஆளாகியுள்ளேன். மீண்டும் மீண்டும் இது அற்புதமாகும்; அற்புதமாகும் என்று கூறினார்.

அவர் கூறுகின்றார்: ஜமாஅத்தில் அன்பு மிகைத்து காணப்படுகிறது. மேலும் உங்களது முகத்தில் எப்போதும் புன்முறுவல் இருப்பதை நான் பார்க்கின்றேன்.

அல்லாஹ் பைஅத் செய்தவர்களின் கலப்பதற்றத்தன்மையிலும், பற்றுணர்விலும், ஈமானிலும் முன்னேற்றத்தை வழங்கிக் கொண்டே இருப்பானாக. மேலும் நம்மில் ஒவ்வொருவருக்கும் ஜல்ஸாவின் அருட்களிலிருந்து அருளைப் பெறுபவர்களாக ஆக்குவானாக. மேலும் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் துஆக்களுக்கு வாரிசாக்குவானாக.

மீடியாவின் மூலமாக இந்த ஆண்டு ஜெர்மனியிலுள்ள மொத்தம் 13 மீடியாக்கள் ஒளிபரப்பியது. இது மட்டுமின்றி இத்தாலி, சீனா நாடுகளில் ஆன்லைன் பத்திரிகைகளும் செய்தி வெளியிட்டது. இவர்களது கணக்கிற்கேற்ப இரண்டு கோடியே 26 லட்சம் மக்கள் வரை தூதுச் செய்தி சென்று சேர்ந்துள்ளது.

ரிவிய்யூ ஆஃப் ரிலீஜியன் மூலமாகவும் பல்வேறு நிகழ்சிகள் வந்து கொண்டிருந்தது. இதன் மூலமாக இது ஒரு வாரம் வரை தொடரும். மேலும் ஒரு பில்லியன் மக்களை வரை தூதுச் செய்தி சென்றடையும் என்று இவர்கள் எண்ணுகின்றனர். MTA Africa விலும் ஜல்ஸாவின் நிகழ்ச்சிகள் காட்டப்பட்டது. ஜெர்மனி ஜல்ஸா தொடர்பாக அறிக்கைகளை தயார் செய்யப்பட்டு அனுப்பப்பட்டது. அதை கானாவின் தேசிய தொலைக்காட்சி ஒளிபரப்பியது. கேம்பியாவின் தேசிய தொலைக்காட்சி, ரவான்டாவின் தேசிய தொலைக்காட்சி, சிராலியோனின் தேசிய தொலைக்காட்சி, யுகண்டாவின் தேசிய தொலைக்காட்சி ஆகியவை ஒளிபரப்பின.

அல்லாஹ்வின் அருளால் மிகப் பரந்த அளவில் ஜல்ஸா தொடர்பாக ஜமாஅத்தின் தூதுச் செய்தி சென்று சேர்ந்தது. அல்லாஹ் எல்லா வகையிலும் இதனை அருளுக்குரியதாக ஆக்குவானாக.

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad